Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது

ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 08 (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :268

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்ப்பாணம்.
• பல் கட்டுவதற்கும்,
• பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
• இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
[1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
(சி/2494)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு; மீளவும் விண்ணப்பம் கோரப்படும்!

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு நிதியமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி ஒழுங்குகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே மீளவும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக நிதியமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

வேலையற்ற பட்டதாரிகளில் 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமென கடந்த பொதுத் தேர்தல் வாக்குறுதியில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்திருந்தது.

ஆனால், தற்போது விண்ணப்பம் கோரப்பட்டவேளை அறுபதினாயிரத்திற்கு மேல் விண்ணப்பங்கள் கிடைத்தமையால் அரசாங்கம் பாரிய நெருக்கடியை சந்தித்துள்ளது.

இதேவேளை, தனியார் துறைகளில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளும் அரச தொழில்களை எதிர்பார்த்து விண்ணப்பங்களை சமர்பித்திருப்பதனால் மேலும் சிக்கலான நிலமை தோன்றியுள்ளதாகவும் அந்தச் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

பட்டதாரிகளின் பொருட்டு- வேலைவாய்ப்பு வழங்குவதற்காக அரச வர்த்தமானியில் பதவிகள் மற்றும் வெற்றிடங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பங்களைக் கோருவது இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு பொருத்தமான வழிமுறையெனவும் நிதியமைச்சின் உயர் பதவிகளில் உள்ளவர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்கமும் இது தொடர்பாக அரசிற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

விண்ணப்பித்துள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அறுபதினாயிரமெனவும் இதன்படி இது தொடர்பாக எடுக்கவேண்டிய வழிமுறைகள் குறித்து ஜனாதிபதியின் இறுதி ஆலோசனையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நிதியமைச்சின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவாளரை இடைநிறுத்துவதென பேரவைக் கூட்டத்தில் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பதிவாளரைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு பல்கலைக்கழக பேரவை நேற்றுத் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பதிவாளர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திற்கான கொடுப்பனவை- இரண்டு தடவை வெளிநாடு சென்றதாகத் தெரிவித்துப் பெற்றுக் கொண்டதாக ஊழியர் சங்கம் குற்றம் சாட்டியிருந்தது.

இது குறித்து நேற்று நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கும் வரை பதிவாளரை தற்காலிகமாக இடைநிறுத்துவது என்றும்,

பதிவாளர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விசாரணைக் குழு ஒன்றை அமைப்பது என்றும், இந்த விசாரணைக்குழு பதிவாளருக்கு எதிரான குற்றச்சாட்டுத் தொடர்பாக ஆராய்ந்து சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதென்றும் பேரவை முடிவு செய்தது.

இந்தக்குழுவில் - யாழ்.அரச செயலகத்தின் அதிகாரி மகாலிங்கம், யாழ்ப்பாண பிரதேச செயலர் செந்தில்நந்தன், பேராசிரியர் கந்தசாமி ஆகியோரை விசாரணைக் குழுவில் நியமிப்பது என்றும் பேரவை தீர்மானித்துள்ளது.

பேரினவாதிகளை போரில் சந்திக்க தலைவர் தயாராகவே இருக்கிறார்!

அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்தின் ஒற்றுமையைச் சிதைக்கும் நடவடிக்கையில் பேரினவாத சக்திகள் முனைந்து செயற்படும் நிலையில், அனைவரும் ஒரணியில் திரண்டு இதை முறியடிக்கத் தயாராக வேண்டும்.

பேரினவாத சக்திகளை போரில் சந்திக்க எமது தலைவர் தயாராக இருக்கிறார் என அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் தெரிவித்தார்.

நேற்று மானிப்பாயில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் 3 ஆவது சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொட்டேகொட!

துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் தெரிவித்தார்.

நேற்று மானிப்பாயில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் 3 ஆவது சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

உண்மையில் யாழ்.குடாநாடு மீண்டும், மீண்டும் பேரழிவுப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் ஒரு மாவட்டமாகக் காணப்படும் நிலையை நாம் காண்கின்றோம்.

இவ்வாறான செயல் திட்டமிடப் பட்டதாகவே காணப்படுவதால், நாம் எல்லோரும் ஒருமித்துச் செயற்படுகின்ற பாரிய பணி எம்மிடம் உண்டு.

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் அபாயகரமானவையா எனச் சிந்திக்கத் தூண்டுகிறது.

எதிரியின் செயற்பாடுகளுக்கு யாழ்.குடாநாடு முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது.

எமது கலாசார விழுமியங்களை பாதுகாத்துவந்த இந்த யாழ். மண்ணில் - கலாசார சீரழிவுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால், எமது தேசத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இலங்கையின் 17 ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை நியமிப்பதற்கான அங்கீகாரம் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் வழங்கப்பட்டது.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார்.

இவரது இடத்திற்கே மேஜர் ஜெனரல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கரேஜஸ் கப்பலை பொறுப்பேற்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்க - இலங்கை கடற்படை தளபதிகள் ஒப்பமிடுகின்றனர்.

அமெரிக்கக் கடற்படைத் தளபதியுடன் அட்மிரல் தயா சந்தகிரி முக்கிய பேச்சு!

அமெரிக்க கடற்படையினர் நடவடிக்கைகளுக்காக துணைத்தளபதி அட்மிரல் மைக்முல்லனை சந்தித்து -

சட்டவிரோத ஆயுதக் கடத்தலைத் தடுப்பது, துறைமுகங்கள் மற்றும் கடல் வலயப்பாதுகாப்பு மற்றும் இலங்கையின் சமகால இராணுவ நிலவரம் குறித்து இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பேச்சுக்களை நடத்தினார்.

அமெரிக்காவில் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகமான பென்ரகனில் நடந்த சந்திப்பிலேயே இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

பென்ரகனுக்கு விஜயம் செய்த இலங்கையின் முதலாவது படைய திகாரி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சர்வதேச பாதுகாப்பு மற்றும் ஆயுதக்கட்டுப்பாட்டு பிரிவின் செயலாளர் ஜோன் போல்டனையும் கடற்படைத் தளபதி சந்தித்துப் பேசினார்.

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் மற்றும் அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆர்மிரேஜ் ஆகியோருடன் இடம் பெற்ற மற்றுமொரு சந்திப்பில் இலங்கைக் கடற்படைக்கு ரோந்துக் கப்பலை வழங்கியமைக்கு தயா சந்தகிரி நன்றி தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி விபத்துக்களைத் தடுக்க பொலிஸார் துண்டுப்பிரசுரம்!

(வடமராட்சி)

அதிகரித்துவரும் வீதிவிபத்துக்களைத் தடுக்கும் முகமாக, பருத்தித்துறை பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

இந்த விபத்துக்களின் காரணங்களை விளக்கி, யாழ் பொலிஸ் அத்தியட்சகரால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தை பருத்தித்துறை பொலிஸார் பொதுமக்களுக்கு விநியோகித்து வருகின்றனர்.

இதுதவிர பொலிஸ் பிரிவினரால் விபத்துக்களைத் தடுக்கும் வாசகங்கள் கொண்ட பதாதைகள் நகர்ப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகமாக நடைபெறுவதால், பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (17)

வடமராட்சிப் பகுதிகளில்

பெண்கள் மீது சேஷ்டை புரிந்தவர்கள் கலாசாரக் குழுவால் எச்சரிக்கை!

வடமராட்சிப் பிரதேசத்தில் முக்கிய சந்திகளிலும், வீதிகளிலும் நின்று - மாணவிகள், இளம்பெண்கள் மீது பகிடி, சேஷ்டைகளில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் கலாசாரம் பேணும் குழுவினரால்அழைக்கப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றனர்.

பருத்தித்துறை நகரம், அல்வாய், வதிரி போன்ற சந்திகளில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட இளைஞர்களை அண்மையில் கலாசாரம் பேணும் குழுவினரால் அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஏனைய இடங்களிலும் மேற்கொள்ளப்படுமென காலசாரக் குழுவினர் தெரிவித்தனர்.

பொதுமக்கள் கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து, இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (17)

லெப்டினன் உத்தமனின் நினைவுக்கல் திரைநீக்கம்

திருகோணமலைக் கடற்பரப்பில் கடந்த மாதம் 28 ஆம் திகதி வீரச்சாவடைந்த லெப்டினன் உத்தமன் (பொன்னுத்துரை - அருமைத்துரை, சண்டில்குளம் கரவெட்டி) நினைவாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளது.

அன்னாரின் திருவுருவப்படம் அன்னாரின் இல்லத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, கரவெட்டி சண்டில்ணகுளம் நவசக்தி சனசமூக நிலையத்தில் பொதுமக்கள் மத்தியில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றுப் பின்னர், வடமராட்சி மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துவரப்பட்டு, திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (17)

பருத்தித்துறை நகரை

நவீன முறையில் அபிவிருத்தி செய்வதற்கு நகரசபை துரிதகதியில் நடவடிக்கை!

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரம் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் அழிவடைந்துள்ளது. இந்த நகரை மீண்டும் கட்டியெழுப்ப பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக - 370 இலட்சம் ரூபா செலவில் நவீன சந்தையொன்றை அமைப்பதற்கு நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அழிவடைந்துள்ள பருத்தித்துறை நகரைக் கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைக்கூட்டம் ஒன்று அண்மையில் பருத்தித்துறை நகரசபையின் செயலாளர் திருமதி விமலா திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், என். கஜேந்திரன், எஸ்.சிவனேசன், நகர அபிவிருத்தி அதிகாரசபைப் பணிப்பாளர் இராசநாயகம், விடுதலைப் புலிகளின் பருத்தித்துறை அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.தயா, உள்ளூராட்சி திணைக்கள யாழ்.பிராந்திய பொறுப்பாளர் எஸ்.சுப்பிரமணியம் உட்பட பல திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு -

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் முயற்சியால், புதிய சந்தை ஒன்றை அமைப்பதற்கு 370 இலட்சம் ரூபா கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக வழங்கப்படும் 150 இலட்சம் ரூபாவைக் கொண்டு புதிய சந்தை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

திக்கமுனையில் தரித்து நின்று சேவையில் ஈடுபடும் மினிபஸ், ஆட்டோக்கள் - பருத்தித்துறை பஸ் நிலையம் ஊடாக சேவை செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மருதடியிலுள்ள வடபிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போ ஆனைவிழுந்தான் வெளிக்கு மாற்றப்படவிருப்பதால், தற்போது டிப்போ உள்ள இடத்தில் விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பருத்தித்துறை நகரசபைப் பகுதிகளில் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க, பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை ஏற்றிச்செல்லும் லொறிகள் - மந்திகை உபயகதிர்காமம், வராத்துப்பளை, தும்பளை மணியகாரன் சந்தி கடற்கரை ஊடாகச் சென்றுவர அனுமதிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நூலக சேவையுடன் இயங்கிவரும் பொது நூலகத்திற்கு நூலகர் இன்மையால் நூலகர் ஒருவரை நிரந்தரமாக அல்லது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க நடவடிக்கை எடுத்தல்.

பருத்தித்துறை நகரத்தில் நீண்ட காலமாகத் திருத்தப்படாத வீதிகளைத் திருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்வது எனவும் இந்தக்கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது. (17)

யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மாலை 4 மணிக்கு கல்லூரியின் அதிபர் நோயல்.த.வ. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப்பரிசளிப்பு விழாவுக்கு தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி என்.ஜெபநேசன், திருமதி விமலா ஜெபநேசன் ஆகியோர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர். (17)

நிறைகுசனைல் சங்கானை
முரளி, கௌசல்யா நடித்த
காலமெல்லாம் காதல் வாழ்க
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHPOSURE
(சி/2621)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
சூர்யா, மாதவன், மீராஜாஸ்மின், ஈஷா நடித்த

ஆயுத எழுத்து
(சி/2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
விஜய், திரிஷா,பிரகாஷ்ராஜ் நடித்த

கில்லி
காட்சிநேரம் :-10.30,2.30,6.30,9.30 (பகே)

மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை

மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு

உடல் அங்கங்களை பாதிக்கக்கூடிய விபத்துக்கள் மறக்கமுடியாத மனப்பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்ற ஓர் அனுபவமாக அனைவருக்கும் மாறிவிடுகின்றது. இப்படிப்பட்ட விபத்துக்களின் விளைவாக பழைய தொழிலை தொடரமுடியாத நிலை, கல்வி கற்கும் சிறுவர்களாயின் கல்வியைத் தொடர்வதில் உள்ள பிரச்சனைகள், போக்குவரத்தில் உள்ள பிரச்சனைகள், பாரபட்சமாக நடாத்தப்படும் நிலை மருத்துவ ஏனைய செலவீனங்கள் போன்ற பல்வேறு பிரச்சனைகளும், தடைகளும் உருவாகின்றன. வாழ்க்கையானது சவால்கள் நிறைந்ததாக மாறிவிடுகின்றது.

இப்படிப்பட்ட, வாழ்கையையே மாற்றி அமைக்கக்கூடிய விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள், விளைவுகள் பற்றி பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் இவ்வகையான பாதிப்பிற்கு உள்ளானோரின் புனர்வாழ்வு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அரசசார் நிறுவனங்களும் பல உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் உடல் பாதிப்பிற்கு உட்பட்டோருக்கு (கை, கால், இழப்பு அல்லது வேறுவகையான இழப்பு) அதிலும் குறிப்பாக மிதிவெடி, வெடிபொருட்களினால் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வகையில் மிதிவெடியால் பாதிப்பிற்கு உட்பட்ட ஒரு நபர் அலலது அவரது குடும்பம் பின்வரும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. உடல் ரீதியான இழப்புக்களுக்கான மருத்துவ ஏனைய உதவிகள்
2. உளரீதியான தாக்கங்களுக்கு தேவையான உளவளத்துணை.
3. பொருளாதாரரீதியான இழப்புக்களை ஈடுசெய்ய கடன் அடிப்படையிலான நிதியுதவி.

போன்ற உதவிகளை இப்புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளமுடியும்.

மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருட்களினால் அங்க அல்லது வேறு உடல்ரீதியான இழப்புக்களுக்கு உட்பட்டவர்கள் உடற்பயிற்சி செயற்கைக்கால் பொருத்துதல், சக்கர நாற்காலி, கவையுள்ள கொம்பு (Crutches) வழங்குதல் போன்ற சேவைகள் உதவிகளை ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிலகம் (Jaipur Foot) வழங்குகின்றது. அத்துடன் எந்தத் தொழில்நுட்ப உபகரணம் உ ள் தேவையைப் பூர்த்திசெய்கின்றதோ அதை நீங்களாகவே தெரிவு செய்யக்கூடிய வசதியையும் வழங்குகின்றது.

ஒவ்வொரு மனிதரும் விபத்தைச் சந்தித்த பின் பல விளைவுகளை எதிர்கொள்கின்றனர். அதாவது தனக்கு ஏற்பட்ட இயலாமை, தன்னைச் சார்ந்தோர் எதிர்கொள்ளும் இழப்பு, பாதிப்பினையும் உணர்ந்து மிக அதிகளவிலான உளத்தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். உளத்தாக்கத்தில் இருந்து விடுபட்டு இயல்பு வாழ்க்கை வாழ உளவளத் துணையை குடும்ப புனர்வாழ்வு நிலையம் (FRC) வழங்கிவருகின்றது.

சிறுவர்கள் மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருட்களினால் பாதிப்பிற்குட்பட்டு பாடசாலைக்கு திரும்பும் பொழுது பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். இச்சந்தாப்பத்தில் நம்பிக்கையின் இல்லம், வாழ்வகம் என்பன பார்வைக் குறைபாடு, பேச்சுக்குறைபாடு, உடல் பாதிப்புள்ள சிறுவர்களுக்கு உதவியும், ஆதரவும் வழங்கி வருகின்றன.

மேலும், சுயதொழில் வாய்ப்பிற்கான கடன் உதவிகளை ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) வழங்கி வருகின்றது. அத்துடன் அரசாங்கம் ஒரு தொகைப்பணத்தினை நன்கொடையாக வழங்கி உதவுகின்றது.

மிதிவெடி மற்றும் வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஒரு நபர் அல்லது அவரது குடும்பம் விபத்தைச் சந்தித்ததில் இருந்து அந்நபரை அல்லது அவரது குடும்பத்தை மீண்டும் சமூகத்தில் பழைய நிலைக்கு கொண்டுவரும் வரையான சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

இப்புனர்வாழ்வு நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்ள உதவி வழங்கும் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மட்டுமன்றி பாதிப்பிற்குள்ளானவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகமிக அவசியமாகின்றது.

District Mine Action Office, Jaffna

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி/2677)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானப் பேச்சுக்களில் சகல கட்சிகளையும் இணைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா முயற்சி

சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பொருட்டு, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சகல கட்சிகளையும் இணைத்துக் கொள்வதற்கு தனது அரசாங்கம் காத்திரமான முயற்சிகளை எடுத்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இந்த நாட்டின் சகல சமூகத்தையும் சேர்ந்த மக்கள் - தமது நியாயமான அபிலாஷைகளைத் திருப்திகரமாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த முயற்சிகள் எடுக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பாக, தனது அரசாங்கம் பிரேரணைகளை முன்வைப்பதில் உறுதியாக இருக்கிறது.

இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகளுக்குச் சிங்கப்பூர் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு நன்றியையும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சிங்கப்பூர் பிரதமர் கோ சொக் டொங்குக்கு ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்துபசாரத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து பேசிய ஜனாதிபதி - புதிய சமாதானத்தை நோக்கிய பயணத்திலும், பொருளாதாரத் துறையை மீளக் கட்டியெழுப்புவதிலும் இலங்கை பலத்த சவால்களை எதிர்நோக்கி வருவதையும் நினைவுபடுத்தினார்.

வவுனியா வளாக மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றுடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழத்தின் வவுனியா வளாக மாணவர்கள் மேற்கொண்டு வந்த போராட்டம் நேற்று முடிவுக்கு வந்துள்ளது.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் முதல் மாணவர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர், வளாக முதல்வர் மற்றும் பீடாதிபதிகள் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று மாணவர்களுடன் வவுனியா அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன், கிஷோர் ஆகியோர் சமரச பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது மாணவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுவதாக இணக்கம் ஏற்பட்டதை அடுத்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பை கைவிட்டனர்.

குருநாகல் பஸ் விபத்தில்

பலியான மாணவ சகோதரிகளின் குடும்பத்துக்கு திருமலை தமிழீழ மாணவர் அமைப்பு அனுதாபம்

கடந்த புதன்கிழமை குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் கொல்லப்பட்ட இரண்டு மாணவ சகோதரிகளையும், ஒரு சிங்களத் தாயையும் இழந்த சிங்களப் பெரும்பான்மைச் சகோதர குடும்பத துயர்களில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம் என திருமலை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் காலத்துக்குக் காலம் இவ்வாறான விபத்துக்களின்போது உயிரிழந்த பல சம்பவங்கள் நடந்தபோதும் கூட, தமிழீழ மாணவர் அமைப்பு என்ற வகையில் தற்போது நடந்த இந்தச் சம்பவம் குறித்து நாம் மிகுந்த கவலையும், வேதனையும் அடைகின்றோம்.

அவர்களுடைய இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தமிழீழத்தின் திருமலை மாவட்ட மாணவர் அமைப்பின் சார்பில் எமது கவலைகளையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கு இழப்புகள் இடம்பெறுகின்றபோதும், அது மனிதம் இழக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் எங்களுடைய துயர்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்.

எங்களுடைய இழப்புகளையும், துயரங்களையும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்ற அடிப்படையில், இந்த இழப்புக் குறித்து எமது ஆழ்ந்த கவலைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நாம் ஆறுதலடைகின்றோம்.

இவ்வாறு திருமலை மாவட்ட மாணவர் அமைப்பு - குருநாகலில் இடம்பெற்ற வீதிவிபத்தில் உயிரிழந்த பாடசாலை மாணவிகளுக்காக நேற்றுமுன்தினம் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10)

புலிகளின் இடைக்கால யோசனை விமர்சிப்பது பொருத்தமானதல்ல

அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்னர் - இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேசவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில், தவறுகள் ஏதுமில்லையென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

கொழும்பு தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றின்போதே, அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்ரீட் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டினால், இலங்கையின் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளதாக, தேசியப் பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வொன்று ஏற்படுவதற்கு முன்னர், இடைக்காலத் தீர்வொன்று அவசியமென்பதை இந்தச் சந்திப்பில் வலியுறுத்திய அமெரிக்கத் தூதுவர், இத்தகைய ஒரு இடைக்கால தீர்வு தொடர்பாகப் பேசவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோருவதில் தவறேதுமில்லை.

அத்துடன், இருதரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்குரிய ஒரு விடயமாக இருக்கும் விடுதலைப் புலிகளுடைய இடைக்கால யோசனை குறித்து, இப்போது விமர்சிப்பது பொருத்தமல்ல எனவும் அவர் இந்தச் சந்திப்பில் மேலும் வலியுறுத்தினார்.

கருணாவுக்கு பாதுகாப்பு வழங்குமாறு ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய - அதிகாரிகளைக் கோரியுள்ளது.

இவ்விடயம் குறித்து ஜாதிக ஹெல உறுமய நேற்றுமுன்தினம் இரவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

கருணா ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கி, இராணுவத்தினருக்கு எதிராகப் போராடிய போதிலும், தற்போது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிமுறையில் கிழக்கை ஆட்சி செய்ய அவர் விரும்புவதாக தெரிவித்த ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் - நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு, இந்த விடயததில் கருணாவுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படவேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

தேசிய எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வின்போது

மானிப்பாயில் நேற்று நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வின்போது பொதுச் சுடரினை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றுவதையும், தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.சிவமகாராசா மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோர் அகவணக்கம் செலுத்துவதையும் மேலுள்ளவில் வீற்றிருப்போரையும், நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவான பிரான்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது கிரீஸ்

(லிஸ்பன்)

ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் - பலம் வாய்ந்த பிரான்ஸ் அணியை வீழ்த்திய கிரீஸ் அணி, அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

லிஸ்பன் நகரில் சுமார் 45 ஆயிரத்து 350 ரசிகர்கள் அரங்கில் கூடியிருக்க நடைபெற்ற இந்த விறுவிறுப்பான போட்டியில் இருந்து பிரான்ஸ் அணி வெளியேற்றப்பட்டதன்மூலம்,

இந்தச் சுற்றுப் போட்டியில் தோல்விகண்ட முன்னணி அணிகளின் வரிசையில் இணைந்து கொண்டது.

இரண்டாவது காலிறுதிப் போட்டி நேற்று முன்தினம் பிரான்ஸ் - கிரீஸ் அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது.

ஷிடேன், ஹென்றி போன்ற முன்னணி வீரர்களைக் கொண்ட பிரான்ஸ் அணி ஆட்டத்தின் ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டது. பதிலுக்கு கிரீஸ் வீரர்களும் தற்காப்பு நிலையிலிருந்து விலகி தாக்குதல் ஆட்டத்தில் இறங்கினர்.

இதனால், ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. எனினும் பலம் வாய்ந்த - தற் போதைய சம்பியனான பிரான்ஸ் அணியே ஆடுகளத்தில் அதிக சாதக நிலையைப் பெற்றிருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் மூர்க்கத்தனமாக மோதித் தாக்கிய போதும் - கோல் அடிக்கக் கிடைத்த வாய்ப்

புக்களை இரு தரப்பும் வீணடித்துவிட்டன.

இதனால, முதல் பாதி நேர ஆட்டத்தில் இரண்டு அணி வீரர்களுமே கோல் எதையும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதி நேர ஆட்டம் தொடங்கியபோது - போட்டி மேலும் விறுவிறுப்படைந்து, பிரான்ஸ் வீரர் ஹென்றி இரண்டாவது பாதி ஆட்டத்தில் தலையால் முட்டி அடித்த பந்தை கிரீஸ் கோல் கீப்பர் தடுத்த தால் கோல் பெறும் வாய்ப்புக் கைநழுவிப் போனது.

இதுபோன்றே பல வாய்ப்புக்களை கோலாக மாற்றும் முயற்சியில் பிரான்ஸ் அணி தோல்வி கண்டது.

இந்த நிலையில் ஆட்டத்தின் 65 ஆவது நிமிடத்தில் கிரீஸ் அணி வீரர் அஞ்சலோ சடாரிடில் தலையால் முட்டி அடித்த அற்புதமான கோல், பிரான்ஸ் அணியை நிலைகுலையைச் செய்தது.

உலகின் தலைசிறந்த கோல் கீப்பர்களில் ஒருவர் எனக் கருதப்படும் பிரான்ஸ் அணியின் பார்த்தஸ் - இந்தக் கோலை சற்றும் எதிர்பாராமல் கோட்டைவிட்டார்.

கிரீஸ் அணி கோல் அடித்த அதிர்ச்சியில் திணறிப் போன பிரான்ஸ் அணி, பதில் கோல் அடிப்பதற்கு கடுமையான தாக்குதலில் இறங்கியது.

ஆனால், கிரீஸ் அணியின் பிற்களத் தடுப்பு வீரர்கள், பிரான்ஸ் அணியின் வாய்ப்புக்களுக்கு இடம்கொடுக்கவில்லை.

இதனால், பிரான்ஸ் அணியால் ஆட்டம் முடியும் வரையில் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால், தற்போதைய சம்பியனான பிரான்ஸ் அணி 1:0 என்ற அடிப்படையில் கிரீஸ் அணியிடம் தோல்விகண்டது.

ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்ட ஐந்தாவது முன்னணி நாடு பிரான்ஸ் ஆகும். ஏற்கனவே லீக் ஆட்டங்களில் ஜேர்மன், இத்தாலி, ஸ்பெயின் அணிகளும், காலிறுதியில் இங்கிலாந்தும் தோல்வியடைந்து வெளியேறியுள்ளன.

இன்று நடைபெறவுள்ள இன்னொரு காலிறுதிப் போட்டியில், மோதும் செக். குடியரசு-டென்மார்க் அணிகளுக்கு இடையிலான ஆட்

டத்தில் வெற்றிபெறும் அணியுடன் - அரையிறுதிப் போட்டியில் கிரீஸ் அணி மோதும்.

இந்தப் போட்டி எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி போர்டோ நகரில் நடைபெறும்.

ஐரோப்பிய உதைபந்தாட்ட வரலாற்றில் முதல்முறையாக கிரீஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் சூதாட்டம் இன்னமும் உள்ளதாம்!

ஐ.சி.சி. அதிகாரி

கிரிக்கெட் விளையாட்டில் சூதாட்டம் இன்னும் பரவிக் கிடக்கிறது என்றும், இருப்பினும் இது போன்ற தீய சக்திகளிடம் இருந்து வீரர்களைப் பெருமளவில் காப்பாற்றி வருவதாகவும் சர்வதேச கிரிக்கெட் சபை ஊழல் தடுப்புக்குழு அதிகாரி தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் எதிர்ப்புக் குழுவின் பாதுகாப்பு மேலாளர் நூருதின் கவாஜா இஸ்லாமாபாத்தில் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது -

"சூதாட்டம் என்பது கிரிக்கெட் விளையாட்டில் மிகப்பெரிய அளவில் பரவிக் கிடக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட தீய சக்திகளிடமிருந்து கிரிக்கெட் வீரர்களைக் காப்பாற்றும் விடயத்தில் மிகப்பெரிய அளவில் வெற்றிபெற்றுள்ளோம்.

கிரிக்கெட் விளையாட்டை அழித்து, எளிதாகப் பணம் சம்பாதிக்கும் வீரர்களுக்கு வழிவகுக்கும் சூதாட்டத்தை ஒழிக்க, இதிலிருந்து வீரர்களைக் காப்பாற்றும் முயற்சியில் பெருமளவில் வெற்றிபெற்றுள்ளோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் ஆறுமுகம் - கமலநாதன் ஞாபகார்த்த ஆறு வீர்கள் பங்குபற்றும் 5 ஓவர்கள் கொண்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜுலை 3 ஆம், 4 ஆம் திகதிகள் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் பங்குபற்றலாம் எனவும், அணி ஒழுங்குத் தெரிவு இன்று நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலக தடகள விளையாட்டு விழா

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வேலாயுதபிள்ளை தலைமையில் 1 மணிக்கு தாளையடி பொது மைதானத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.ரொகான் ராஜசிங்கமும், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சி.பாப்பாவும், யாழ்பாண வலைப்பந்தாட்டப் பயிற்றுனர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கமும், கடற்புலிகளின் தளபதி மா.மங்களேஸ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (12)

முத்தரப்பு கிரிக்கெட் தொடர் மோசமான அட்டவணை

பிளமிங் கூறுகிறார்

முத்தரப்பு கிரிக்கெட் தொடர் அட்டவணையைக் கடுமையாக விமர்சித்துள்ளார் நியூஸிலாந்து கப்டன் ஸ்டீபன் பிளமிங்.

நியூஸிலாந்து அணி தற்போது இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடிவருகிறது. இந்தத் தொடரில் மூன்றாவது அணியாக மேற்கிந்தியத்தீவுகள் பங்கேற்கிறது.

இந்தத் தொடரின் அட்டவணையை கடுமையாக விமர்சித்துள்ளார் நியூஸிலாந்து கப்டன் பிளமிங். இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டி மழையால் ரத்துச்செய்யப்பட்டது. ஆறுதலாக இருந்த பிளமிங்கிடம் பேட்டி எடுக்கப்போன நிருபர்களிடம் தனது கோபத்தை எல்லாம் கொட்டித் தீர்த்து விட்டார்.

'நான் ஏற்கனவே பலமுறை கூறியும், தொடர்ச்சியான ஒரு நாள் போட்டிகளுக்கு முடிவு ஏற்படாதது அதிர்ச்சியை அளிக்கிறது. இந்த தொடரில்கூட நாங்கள் ஜுலை 3 ஆம்

திகதி மேற்கிந்தியத்தீவுகள் அணியையும், அடுத்த நாள் 4 ஆம் திகதி இங்கிலாந்து அணியையும் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

தொடர் நடந்து கொண்டிருக்கும் போதே இது பற்றி கூறுவதாக எண்ணவேண்டாம். முதல் நாளில் 100 ஓவர்கள் விளையாடி விட்டு, அடுத்த நாள் மற்றொரு போட்டிக்கு தயாராவது சிரமமானதொன்று.

இதனால் ஒரு அணி மட்டுமே பயன்பெறும். தங்கள் அணி வீரர்கள் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்று எண்ணும் ரசிகர்களுக்கும் இது அதிர்ச்சியான விஷயமாக இருக்கும். இரண்டு போட்டிகளுக்கு இடையில் ஒரு நாளாவது இடைவெளி அவசியம் தேவை" என்றார்.

கரும்புலிகள் நினைவாக பெரு விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவில் நடத்த ஏற்பாடு

தமிழ்ப் பகுதிகளிலும், மற்றும் அனைத்துலக தமிழர் வாழ் பகுதிகளிலும் பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படும் கரும்புலிகள் நாளை முன்னிட்டு முல்லைத்தீவு நகரில் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டி நிகழ்வுகள் ஜுலை மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை தரையிலும், கடலிலும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் பிற்பகல் 3 மணிக்கு முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் ஒலிம்பிக் சுடர் ஏற்றலுடன் கரும்புலிகள் நினைவு விளையாட்டுக்கள் ஆரம்பமாகும்.

பிற்பகல் 4 மணிக்கு உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும். இதில் முல்லைமாவட்ட அணியை எதிர்த்து, கிளிநொச்சி மாவட்ட அணி மோதும். தொடர்ந்து கபடி, கயிறிழுத்தல், முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் என்பன இடம்பெறும்.

ஜுலை 3 ஆம் திகதி நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து, யாழ். மாவட்ட அணி மோதும். தொடர்ந்து குத்துச் சண்டை, மல்யுத்தம், கயிறிழுத்தல் என்பன இடம்பெறும்.

இறுதி நாளான ஜுலை 5 ஆம் திகதி 9 மணி முதல் பிற்பகல் 7 மணிவரை நீச்சல் போட்டி, படகோட்டப்போட்டி என்பன இடம் பெறும். இரவு நிகழ்ச்சிகள் - இரவு முல்லைத்தீவு மகா வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

இந்தப் போட்டி நிகழ்வுகளில் - தலையணைச் சண்டை, கயிறிழுத்தல் போன்ற போட்டிகளில் ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றுவர்.

வெற்றிபெறும் அணியினருக்கு கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் பொறிக்கப்பட்ட மாவட்ட வெற்றிக் கேடயங்கள் வழங்கப்படும்.

'ஆயுதம்' படப்பிடிப்பில் வடிவேலு மீது தாக்குதல்

(சென்னை)

சென்னையில் நடந்த 'ஆயுதம்' படப்பிடிப்பில் நடிகர் வடிவேலுவிற்கும், நம்பிராஜனுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் படப்பிடிப்பு பாதிக்கப்பட்டது.

நடிகர் பிரசாந்-சினேகா நடிக்கும் 'ஆயுதம்' படத்தின் படப்பிடிப்பு சென்னையில் உள்ள ஏ.வி.எம். ஸ்ரூடியோவில் நடந்து வருகிறது. இதில் நடிகர் வடிவேலு நடித்த நகைச்சுவைக்காட்சி நேற்றுமுன்தினம் காலை படமாக்கப்பட்டது. அப்போது வில்லன் நடிகர் நம்பிராஜன் அங்கு வந்தார்.

வடிவேலு நடித்த காட்சியின் படப்பிடிப்பு முடிந்ததும் அவர் மேக்கப் அறைக்குள் சென்றார்.

உள்ளே இருவரும் சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது இருவருக்கும் இடையே திடீரென்று காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டு இருவருக்கும் வாக்குவாதத்தில் இறங்கினர்.

மேக்கப் அறையினுள் சத்தம் கேட்டதை அறிந்த படக்குழுவினர் அங்கு சென்று இருவரையும் சண்டை போடாமல் தடுத்தனர்.

மேக்கப் அறையில் இருந்து வெளியேறிய நம்பிராஜன் வேகமாகக் காரில் புறப்பட்டுச்சென்று கே.கே.நகர் பொலிஸ் நிலையத்தில் வடிவேல் மீது புகார் செய்தார். அதில் 'நான் எழுதிய நகைச்சுவையை வடிவேல் அவர் எழுதியதாக பயன்படுத்தி என்னை ஏமாற்றுகிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று புகாரில் தெரிவித்தார்.

நடிகர் வடிவேலுவும் பொலிஸ் நிலையம் சென்றார். இருவருக்கும் இடையே பொலிஸார் சமாதானம் செய்து வைத்தனர். அதன்பிறகு இருவரும் அங்கிருந்து வெளியேறினர். வடிவேல் - நம்பிராஜன் மோதலால் படப்பிடிப்பு பாதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹலோ ட்றஸ்ட் வாகனங்கள் தீக்கிரை; தொண்டர் நிறுவனங்கள் கண்டனம்!

ஹலோ ட்றஸ்ற் நிறுவனத்தின் வாகனங்களை எரித்த மனிதாபிமானமற்ற செயலை அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக இணையத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மனிதநேயத்தை மையமாகக் கொண்டு, கண்ணிவெடி அகற்றிச் செயற்படவந்த பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த சர்வதேச தொண்டர் நிறுவனமான 'ஹலோ ட்றஸ்ற்' மீது நடாத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல் நடவடிக்கையினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்களின் உயிர்களைக் காவு கொள்ளுகின்ற கண்ணிவெடிகளை, தமது உயிர்களை பணயம் வைத்து, அகற்றி மக்களின் பாதுகாப்பான வாழ்வுக்கு உறுதி செய்யும் பணிபாராட்டப்பட வேண்டியது. தனிப்பட்ட குரோதங்கள் ஒரு ஸ்தாபனத்தை நிர்மூலமாக்கும் நடவடிக்கை வேதனையளிக்கின்றது. குரோதங்கள், விரோதங்கள், பிரச்சினைகள் பேசித்தீர்க்கப்பட வேண்டியவையே ஒழிய வன்முறைதான் நடவடிக்கையல்ல.

இத்தகைய வன்முறை கலாசாரம் எதிர்காலத்தில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தமது தொண்டுகளை கைவிட்டுத் திரும்பும் நிலை ஏற்படலாம். அப்படித்திரும்பும் பட்சத்தில் பாதிக்கப்பட்டப் போவோர் எனது மக்களே.

"கண்ணிவெடி இடர் அபாயக் கல்வி விழிப்புணர்வு வாரம்" அனுஷ்டிக்கின்ற இந்தவேளையில், நடைபெற்றது மிகவும் வேதனையானதே. இப்படிப்பட்ட செயல்கள் இனிவரும் காலங்களில் இடம்பெறாமல் தவிர்க்கப்படுவதுடன், இத்தகைய மிருகத்தனமான செயலை இணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் மைதானம் விஸ்தரிக்கப்படுகின்றது

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் அமைந்துள்ள காணியில், குடியிருந்த குடியிருப்பாளர்களுடன் ஈச்சமோட்டை சனசமூக நிலைய நிர்வாகத்தினர் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பயனாக, அந்தக் குடியிருப்பாளருக்குரிய இழப்பீடு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, குடியிருந்தவர்கள் அந்தக் காணியினை சனசமூக நிலையத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

தற்போது இந்தக் காணி துப்பரவு செய்யப்பட்டு, மைதானம் விஸ்தரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சனசமூக நிலையம் அமைந்துள்ள காணியின் கிழக்குப் பக்கமாக உள்ள கால்வாயை மூடிக்கட்டி, மைதானத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் நிறைவடைந்தால், யாழ். நகரின் முக்கிய மைதானங்களில் ஒன்றாக, இந்த மைதானம் மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இந்த மைதானத்தை விஸ்ரிப்பது தொடர்பாக கடந்த இருதசாப்த காலமாக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட போதும், தற்பொழுதே இந்த மைதானத்தை விஸ்தரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதாக ஈச்சமோட்டை மக்கள் தெரிவித்தனர். (58)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

நல்லூர்ப் பிரதேச சபையின் பிரிவுக்குட்பட்ட 11 வீதிகள் மற்றும் ஒரு மதகு முதலானவற்றைப் புனரமைப்பதற்கு 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக நல்லூர்ப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கான அனுமதியை உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரியிருப்பதாகவும், அவரது அனுமதி கிடைத்ததும் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வழங்குவதற்கான 74 ஆயிரத்து 400 ரூபாவும், பொது நூலகங்களுக்கென 30 ஆயிரம் ரூபாவும், மகப்பேற்றுப்பிள்ளைகள் பராமரிப்பதற்கென 10 ஆயிரத்து 300 ரூபாவும், மலசல கூடப்புனரமைப்புக்கென ஆறு ஆயிரம் ரூபாவும் உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

இளைஞனைக் காணவில்லை

சுண்டுக்குழி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை கடந்த இரண்டு வாரகாலமாகக் காணவில்லை என யாழ். சிறுகுற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் இந்த இளைஞனின் தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

20 வயதான பாக்கியநாதர் றெஜினேஸ் என்பவரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டது.

இவர் இந்தமாதம் 2ஆம் திகதி தனது வீட்டிலிருந்து புறப்பட்டவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும், உறவினர்கள் வீடுகளில் தேடியும் காணவில்லை எனவும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச சபையிலிருந்து ஓய்வு பெற்றோருக்கும், இடமாற்றம் பெற்றுச்செல்வோருக்கும் அண்மையில் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தின்போது பிடிக்கப்பட்டபடம்.

டெங்கு விழிப்புணர்வு பேரணி மன்னாரில்

அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவது குறித்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மன்னாரில் நேற்று முன்தினம் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியில் ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்களும், பொது மக்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் டெங்குக் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு, இந்த நோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் டெங்கு ஒழிப்பு வாரம் நடைபெற்று வருகிறது.

இந்த வாரத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள மன்னார் மாவட்ட சுகாதார திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் பேரணி ஒன்று நடைபெற்றது.

காலை 10 மணிக்கு மன்னார் நகர மண்டபம் முன்பாக ஆரம்பமான பேரணி கச்சேரி வீதியூடாக, பொலிஸ் நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதியை வந்தடைந்து, அங்கிருந்து மன்னார் பொது மைதானத்தை சென்றடைந்தது.

இந்தப் பேரணியில் பெருமளவிலான மாணவர்களும், பொது மக்களும், சுகாதார திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணியில் டெங்கு நோய் ஒழிப்போம் என்ற தொனியில் பல்வேறுகோசங்களை தாங்கியவாறு மாணவர்கள் பேரணியில் ஈடுபட்டனர். (201)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான

வினைத்திறமைகாண் பரீட்சைக்கான விரிவுரை வகுப்புக்கு விண்ணப்பிக்கவும்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை விரைவில் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ், கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கே (அரச நியமனம் பெற்று வேதனம் பெறுவோர்) பரீட்சை தொடர்பான விரிவுரை நடாத்தப்படவுள்ளது.

எனவே, இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்து, பரீட்சைக்குத் தயாராகும் முன்பள்ளி ஆசிரியர்கள் தமது பெயர், விலாசம், உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி, உள்ளூராட்சி உதவியாளர், வலி. தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.

விரிவுரை இடம், நேரம், காலம் பின்னர் அறிவிக்கப்படும். (44)

ஆங்கில தினப்போட்டியில் மாகாண மட்டத்தில் 2ஆம் இடம்

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்திலான ஆங்கில தினப்போட்டியில், பார்த்தெழுதல் போட்டியில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 4ஆம் ஆண்டு மாணவி மிதுலா விவேகானந்தன் 2ஆம் இடத்தை பெற்று பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற் றுக்கொண்டார்.

இவர் தும்பளையைச் சேர்ந்த சுப்பையா விவேகானந்தனின் மகள் ஆவார்.

தகவல் தொழில் நுட்ப புதிர்ப் போட்டிக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான தகவல் தொழில் நுட்பப் புதிர்ப்போட்டிக்குப் பாடசாலை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தகவல் தொழில்நுட்ப புதிர்ப்போட்டியானது- முதற்சுற் றில் கடந்த ஆண்டு போன்று பல தேர்வு வினாக்களைக் கொண்டதாகவே அமையவுள்ளது.

இதன் அடிப்படையிலே இரண்டாம் சுற்று போட்டி நடைபெறும். எனவே, யாழ். மாவட்ட பாடசாலைகள் ஒவ்வொன்றிலிருந்தும் 31.05.2004 அன்று 19 வயதுக்குட்பட்ட -நான்கு மாணவர்கள் போட்டியில் கலந்து கொள்ளமுடியும்

எனவே, பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தங்களிடம் அனுப்பி வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து, எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்தார்.

போட்டிகள் யாவும் ஜுலை மாதம் நடுப்பகுதியில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான பாடசாலை

(யாழ்ப்பாணம்)

மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கென கோண்டாவில் அரசடிச் சந்தியில் சிவபூமிப் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை எதிர்வரும் 2ஆம் திகதி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்து வைக்கப்படவுள்ளது. தற்போது இந்தப் பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்கு 23 பிள்ளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள மனவளர்ச்சிகுன்றிய சிறார்கள் அனைவரும் இங்கு கல்வி கற்கக் கூடிய [illegible] கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

நாவற்குழி ஏ-9 வீதியிலிருந்து மதகு திருத்தப்படுகிறது

ஏ-9 வீதியில் நாவற்குழி உணவுக் களச்சியத்திற்குச் சமீபமாக உடைந்த நிலையிலிருந்த மதகு தற்போது துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மிகவும் மோசமாக சேதமுற்றிருந்த இந்த மதகு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திருத்த வேலைகளுக்காக வீதியின் வடக்குப் பக்கமாகத் தற்காலிக பாதையொன்றும் திறக்கப்பட்டுள்ளது. (24)

இந்தியாவிலிருந்து கடலட்டை எடுத்து வந்தவர்கள் கைது!

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 15 முடை கடலட்டைகள் பேசாலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்திய மீனவரின் உதவியுடன் மன்னார் - பேசாலைக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான கடலட்டை எடுத்துவரப்பட்டது.

இவை பேசாலையிலிருந்து கொழும்புக்கு அனுப்புவதற்கு முயற்சித்தவேளை - அந்தப் பகுதிக்குச்சென்ற பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் இருவருக்கும் எதிராக குடிவரவு, குடியகலவு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பதற்காக, சுங்கத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். மன்னார்ப் பிரதேசத்தில் கடலட்டை பிடிப்பதற்கான காலம் குறைவடைந்ததையடுத்து, இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்டு, கொழும்புக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (201)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர் : சஞ்சிகா
முகவரி : கிளிநொச்சி.

ஒன்பதாவது அகவையில்

பெயர் : ஆ.துஷிஜந்தன்
முகவரி : இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை இதோ இதோ

வெய்ன் ரூனி (9) - பெக்கம் "மனங்கவர் ராசாக்கள்"

யூரோ கிண்ண உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பல ஆச்சரியங்கள், அதிர்ச்சிகள், ஏற்றங்கள், இறக்கங்கள் இருந்தும் இவை எல்லாவற்றையும் தொலைக்காட்சியில் பார்த்து ரசிக்கும் வாய்ப்பு எத்தனை பேருக்கு யாழ். குடாநாட்டில கிடைத்திருக்கும் என்று பார்த்தால் அநேகமாக எல்லோரது முகத்திலும் சோகம் படிந்திருப்பதைத் தான் காணமுடிகிறது.

இன்னொரு வகையில் யாழ்.பத்திரிகைகள் தங்களால் இயன்றளவில் யாழ். குடாநாட்டு உதைபந்தாட்ட ரசிகர்களை இந்தத் தொடர் பற்றி அறிந்துகொள்ளச் செய்தமையைப் பாராட்டியே ஆகவேண்டும். யூரோ உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பல ஆச்சரியங்களில் ஒன்றுதான் இங்கிலாந்தின் புதிய நட்சத்திரம் 18 வயதான வெய்ன்ரூனி. இவர் குரோசியாவுக்கு எதிரான போட்டியில் அடித்த இரண்டு கோல்கள் இங்கிலாந்தைக் காலிறுதிக்குக் கொண்டு சென்றன. ரூனியை சில மணிநேரத்தில் உலக உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவருமே இவனா? இந்தச் சின்னப்பையனா சாதித்தான், என்று மூக்கில் விரலைவைக்க, ரூனி கண்மூடிக் கண்திறப்பதற்குள் கதாநாயகனாகிவிட்டார். டேவிட் பெக்கம் கொஞ்சம் பின்தங்கித் தான் போனார். ஒரு விமர்சகர் இவர் பற்றிக் கூறுகையில் - இவர் டேவிட் பெக்கம் போன்ற கதாநாயகன் தோற்றம் கொண்டவருமல்ல, பீலே போன்ற அதீத திறமை கொண்டவருமல்ல. ஆனால், வர்த்தக விளம்பர உலகத்தின் உச்சநபர் என்பதை மறக்க இயலவில்லை என்கிறார்.

தற்போது இவரைத் துரத்தும் பல்தேசிய நிறுவனங்கள் கொக்காகோலா, நைக், EA SPORTS என்று முதன்மையான சிலவற்றைக் குறிப்பிட்டாலும், பட்டியல் நீண்டு செல்கிறது. ஆனால், இது இன்னமும் முழுவீச்சில் ரூனிமீது படரப்போவது EURO உதைபந்தாட்டத் தொடர் முடிந்தபின்தான். அப்பொழுது இவர்மீது பண மழை கொட்டோ கொட்டென்று கொட்டப் போகின்றது என்கின்றார்கள்.

இங்கிலாந்து மற்றும் லிவர்பூல் அணிகளின் நட்சத்திர வீரர் மைக்கல் ஓவனின் விளம்பர சாம்ராஜ்யத்தை வீழ்த்திய ரூனி, பெக்கம் பொறுத்து இரண்டாவதாகத்தான் இருக்கிறார். பெப்சி - அடிடாஸ் - ஜிலைட் ஆகிய மூன்று பாரிய நிறுவனங்கள் மட்டும் பெக்கத்துக்குக் கொடுக்கும் தொகை 27 மில்லியன் அமெரிக்க டொலர்கள். வருடாந்தம் றியல் மட்ரிட் கழகம் பெக்கத்துக்குக் கொடுக்கும் பணம் 6.4 மில்லியன் யூரோக்கள். இதனை ரூனி தற்போதைக்கு நெருங்குவது கடினம். என்றாலும், அதுவெகுதூரத்தில் இல்லை என்பதும் உண்மை. இன்னொன்றும் உண்மையாக நீண்டகாலமில்லை. உலகின் மிகமிகப் பிரபலமான உதைபந்தாட்ட வீரர்களான - பெக்கம் - சிடானே தம் வலைக்குள் வீழ்த்தியுள்ள றியல் மட்ரிட், வெய்ன் ரூனியையும் தம் வலைக்குள் நிச்சயம் வீழ்த்தும் என்பதுதான்.

- அரவிந்தன் -

ஆயிரமாயிரம் அர்த்தங்கள்

டேவ் வட்மோர் - இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்றுனராகப் பொறுப்பேற்ற காலம் - இலங்கைக் கிரிக்கெட் வரலாற்றின் பொற்காலம். இதெல்லாம் முடிந்து வட்மோர் போதும் என்று தீர்மானித்து, புதியவரைக் கொண்டுவருவோம் என்று வலைபோட்டுத் திரிந்தார்கள் இலங்கைக் கிரிக்கெட் சபையினர்.

இந்த வகையில் ஜோன் பிரேஸ்வெல், கிரேம்போட், கிரெக்செப்பல், ஸ்ரீவ்ரிக்சன் போன்றோரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை அவர்கள் மறுக்க, இறுதியாக சம்மதம் தெரிவித்தவர் அவுஸ்ரேலியா ஜோன்டைசன். இப்போது ஏறத்தாழ ஒரு வருடத்தின் பின் பார்த்தால், அறுவடை பெரிதாக இல்லை யென்று கவலைப்படுகின்றது இலங்கை கிரிக்கெட் சபை. எனவே இவரை விடைகொடுத்து அனுப்பி இன்னொரு புதியவரை அந்த இடத்துக்கு நியமிக்கலாம் என்று ஆலோசனை நடப்பதாகக் கேள்வி.

இலங்கையில் நடைபெற்ற இங்கிலாந்துக் கெதிரான போட்டித் தொடரில் இலங்கை அணிவெல்லவேண்டிய முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளை அனாவசியமாக இங்கிலாந்து வீரர்கள் சமப்படுத்தியதற்கு இவரது அணுகுமுறையின் குறைபாடே காரணம் எனப்படுகின்றது. அதை அடுத்து அவுஸ்ரேலியாவிடம் 3-0 என்ற பரிதாப மான தோல்விக்கும் இவர் மீது கணிசமான அளவு குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஜோன்டைசன் ஒரு தேசிய அணியின் பயிற்சியாளர் என்ற வகையில் பாரிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட இலங்கை அணியின் பயிற்று நர் என்ற வகையிலாகும். ஆனால், இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர்களின் திருப்தியான அபிப்பிராயத்தைப் பெற இவர் தவறிவிட்டார். அத்தோடு ஊடகவிய லாளர்களுடனான உறவுகளைச் சுமுகமாகப் பேணிக்கொள்ளும் சாதுரியமும் இவர் குறைவாகவே கொண்டவர் என்று அறியப்படுகின்றார். இந்த நிலையில் இங்கிலாந்தில் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள சம்பியன் கிண்ணப் போட்டிகளின் பின் இவர் கழற்றிவிடப்படலாம் என்று ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொருபுறம் இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் வெளிநாட்டவர் பலர் பல்வேறு கடமைக்கூறுகளின் அடிப்படையில் தொடர்பு கொண்டவர்கள். டேவ்வட்மோர், புரூஸ் யாட்லி, பாரி ரிச்சட்ஸ், டரல் பொஸ்ரர் என்று பட்டியல் நீளும். ஆனால், இவர்கள் யாரும மகிழ்ச்சியாக விடைபெற்றுச் சென்றவர்கள் அல்ல என்பதையும் மனங்கொள்ளத்தான் வேண்டும்.

மீண்டும் உள்ளூர் விற்பன்னர்களை நாடும் போக்கொன்று இலங்கைக் கிரிக்கெட் சபையின் புதிய தெரிவாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது போலத் தெரிகின்றது. றோய் டயஸ் அல்லது ரொமேஷ் ரட்ணாயக்க இந்தப் பதவிக்குத் தயாராக இருக்கிறீர்களா என்று வினவப்பட்டதாகவும் ஒரு செய்தி.

இன்னொருபுறம் சந்தர்ப்பமாகவோ, அசந்தர்ப்பமாகவோ புதிய அரசாங்கம் பதவி ஏற்றபின், இப்படியானதொரு செய்திவெளியாகி இருப்பது இன்னொரு வகையான ஊகத்தையும் ஏற்படுத்துகிறது. அதாவது எல்லாத்துறைகளிலுமே தமக்குத் தேவையானவர்களை, ஆதரவாளர்களை ஆட்சி மாறியதும் நியமித்து முன்னைய ஆட்சியில் இருந்தவர்களை கவிழ்ப்பது இலங்கை அரசியலில் ஒரு "விசேட நிர்வாக கட்டமைப்பு முறை". இந்த வரையறைக்குள் ஜோன்டைசன் அடங்கிவிட்டாலும்(இவர் அவுஸ்ரேலியர்) தமக்குத் தேவையானவருக்கு ஒரு பதவி கொடுக்கும் சிந்தனை ஏற்பட்டதோயாரறிவார்.

- ஜெயா

கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

பிஷன்சிங்பேடி கிரிக்கெட் பற்றிக் கருத்துக் கூற ஆரம்பித்தால், அது யாருடைய மனதையாவது புண்படுத்தாமல் இருக்காது. இதற்கு உதாரணமாக இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன்மீது இவர் தொடுக்கும் தாக்குதலைக் கூறலாம். இந்தியக் கிரிக்கெட் அணி - கடந்த வருடம் அவுஸ்ரேலியா சென்றபோது, வாழ்த்தி அனுப்புவதற்குப் பதிலாக வசைமாரி பொழிந்து தள்ளியவர் இவர். ஆனால், கங்கூலியின் படை அவுஸ்ரேலியாவில் கணிசமான திறமையைக் காட்டிய போது இவர் தன் முகத்தை எங்கே போய் ஒளிதது வைத்துக் கொண்டாரோ தெரியவில்லை.

பேடி-"வினைதூழாமல் விடாது"

இவர் கிரிக்கெட் பற்றி எல்லாவிடயங்களிலும் நெற்றிக் கண்ணைத் திறந்து கொண்டிருக்க, இப்போது படாரென்று பிஷன் சிங்பேடியின் நெற்றிப் பொட்டில் அடி விழுந்திருக்கிறது. இங்கிலாந்தின் கௌரவமிக்க நடுவர்களில் ஒருவர் டொன் ஒஸ்லியர். இவர் தனது சுயசரிதையில் பல விடயங்களைக் கிரிக்கெட் சார்பில் எடுத்துக் கூறிக்கொண்டு செல்கிறார். அதில் ஒரு இடத்தில் நொதன் ரன்ஷயர் கவுண்டிக்காகப் பேடி விளையாடிய போது, ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியிலாவது இவர் முறையற்ற பந்து வீச்சினைக் கையாண்டு இருக்கிறார் என்கிறார். இது தொடர்பில் மற்றைய நடுவர்கூட அதனை அவதானித்துப் பேடியிடம் சுட்டிக்காட்டியதையும், அதன்பின் பேடி தன் பாணியை மாற்றிக் கொண்டதாகவும் கூறுகின்றார்.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒன்றுண்டு என்கிறார்கள் விமர்சகர்கள். அதாவது 1966 ஆம் ஆண்டில் சர்வதேசக் கிரிக்கெட் உலகுக்கு அறிமுகமான பேடி, 1975 ஆம் ஆண்டில் ஒஸலியரால் சுட்டிக்காட்டும்வரை எத்தனை முறையற்ற பந்துகளை வீசியிருப்பார். எத்தனை விக்கெட்டுக்களைச் சாய்த்திருப்பார். அத்தோடு 67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய இவர் எத்தனை தடவை முறையற்ற விக்கெட்டுக்களை வீழ்த்தியிருப்பார் என்று கேட்கிறார் விமர்சகர்.

அதுவும் அன்றைய தொழில்நுட்ப வசதிகளுடன் ஒப்பிடும்போது, இன்று வளர்ந்து தொழில்நுட்பம் ஒவ்வொரு கிரிக்கெட் அசைவையும், ஆயிரம் கண்கொண்டு பார்க்கின்றது. இதன் காரணமாகச் சாதக, பாதகங்கள் விமர்சிக்கப்படுவதும், வெளிப்படுத்தப்படுவதும் வெகு துல்லியம். இதனால்தான் பேடி வெகு உற்சாகமாக மற்றவர்களை நோக்கிச் சுட்டு விரலை நீட்டிக்கொண்டிருந்தார். பாவம்! மற்ற மூன்று விரல்கள் அவரை நோக்கியே திரும்பியிருந்தமையை அவர் கண்டுகொள்ளவேயில்லை. இருந்தாலும், காலம் கடத்தாது கண்டு கொண்டிருப்பார். இனியாவது அவரிடமிருந்து நிதானமான விமர்சனங்களை எதிர்பார்க்கலாமா?.

- ஜோசப் விஜயன்

அக்கரைகள் பச்சைதான்

தென்னாசிய நாடுகள் ஏழில் நான்கு நாடுகள் சர்வதேச கிரிக்கெட் தரம் பெற்றவை. பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகியவையே அவை. இதில் இன்று சட்டென்று நின்று ஒரு கணம் யோசித்தால், இந்த நான்கு நாடுகளினதும் பயிற்றுநர்கள் ஆசியருமல்ல, அந்தந்த நாட்டவருமல்ல. அத்தனை பேரும் வெள்ளை இனத்தவர்கள் பாகிஸ்தான் பயிற்றுநர் இங்கிலாந்தின் பொப்வூல்மர், இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் நியூசிலாந்து நாட்டின் ஜோன்ரைட், இலங்கை அணியின் பயிற்றுநர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஜோன்டைசன் பங்களாதேஷின் பயிற்றுநர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த டேவ்வட்மோர்.


ஜோன்ரைட் - "ஒரு சோறு பதம்"

இன்று தென்னாசிய நாடுகள் ஏன் வெளிநாட்டு, அதுவும் வெள்ளை இனப்பயிற்றுநர்களை நாடி நிற்கின்றன? தத்தம் நாட்டில் திறமையானவர்கள் இல்லையா என்றொரு கேள்வி நியாயமாகவே பிறக்கிறது. அதற்கான நியாயபூர்வமான பதில் கிடைக்கும்போது, வெள்ளை இனப் பயிற்றுநர்கள் வருவது நியாயமாகவேபடும். இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில், சர்வதேச கிரிக்கெட்டும் அந்த வளர்ச்சிப் போக்குக்கு உட்பட்டே இருக்கிறது. இந்தத் தொழில் நுட்பங்களை, நுணுக்கங்களை அறிந்தவர்கள், அத்தோடு பரிச்சயப்பட்டவர்கள் வெள்ளை இனத்தவர்களாகவே இருக்கிறார்கள். எனவே, அவர்களின் வருகை நியாயமானதே. அத்தோடு, வெளிநாட்டுப் பயிற்றுநர்கள் சாதித்தும் இருக்கிறார்கள் என்பதையும் கிரிக்கெட் ரசிகர்கள் நன்கு அறிவார்கள்

ரமீஸ்ராஜாவும் பாகிஸ்தான் அணியைக் குறித்து இதனையே கூறுகிறார். முன்னர் தென்னாபிரிக்கரான ஜோன் பைபஸ் பாகிஸ்தானியப் பயிற்றுநராக இருந்திருக்கிறார். ஆனால், பொப் வூல்மர் அவரைவிடத் திறமையானவர் எனவும், ஜுலை மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணப் போட்டிகளுக்குத் தயாராவதற்கு இவரது வருகை மிகவும் உபயோகமானது என்று ரமீஸ்ராஜா கூறுகிறார்.

முன்னாள் பாகிஸ்தானிய கிரிக்கெட் வீரர்கள் சிலர் வெளிநாட்டவரை நியமிப்பதை எதிர்த்து சர்பிராஸ் நவாசை (முன்னாள் பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர்) நியமித்திருக்கலாம் என்றும் கருத்துக் கூறுகின்றார்கள். இந்தியாவில் சில காலம் கபில்தேவ்கூட பயிற்றுநராக இருந்தார். ஆனால், அவரால் சாதிக்க முடியவில்லை. இலங்கையிலும்கூட ஆரம்பத்தில் உள்நாட்டவர்கள் பயிற்றுநர்களாக இருக்கத்தான் செய்தார்கள். ஆனால், சாதிக்க முடியவில்லை. தற்போதுகூட ஜாவிட் மியன்டாட்டால் இந்தியாவைக் கவிழ்த்து, பாகிஸ்தானை உயர்த்த முடியவில்லை. நல்லதொரு உதாரணம் - மிகத் திறமைசாலியான டேவ்வட்மோர் பங்களாதேஷ் அணியின் பயிற்றுநராகிய பின்னர் பங்களாதேஷ் எதிர்கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான தொடரில் இவர் ஏற்படுத்திய பதிவை எல்லோருமே அறிவர்,

எனவே, பல சர்ச்சைகள் இருந்தாலும், சாதக, பாதக நிலைமைகள் இருந்தாலும், தற்போது தென்னாசியக் கிரிக்கெட் அணிகளுக்கு வெளிநாட்டவர் - அதுவும் வெள்ளை இனத்தவர் பயிற்றுநராக இருப்பது வரவேற்கப்பட வேண்டியதே.

- நிர்மலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்

மிஸ்கினா - ஹெலினா
"யெல்ட்சினின் செல்லங்கள்"

சில வருடங்களுக்கு முன் ரஷ்ய வீராங்கனை ஒருவர் ரெனிஸ் ஆட்டம் ஒன்றில் வெற்றி பெற்றபோது, குழந்தைப் பிள்ளைபோல அரங்கில் குதித்துக் கும்மாளமடித்தவர் ஒரு மிகப் பெரிய புள்ளி. தற்போது அவர் பதவியில் இல்லை. ஆனால், பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டி இறுதி ஆட்டத்துக்கு மிஸ்கினாவும், ஹெலினாவும் தகுதி பெற்றனர். அதனைத் தொடர்ந்து மிஸ்கினா வெற்றி வாகைசூடியது எல்லாவற்றையுமே கூர்மையாக அவதானித்து வந்த அவர் இந்த இரண்டு வீராங்கனைகளுக்கும் ஒரு விருந்து கொடுத்திருக்கிறார். அது மாபெரும் கௌரவம் இந்த இளம் பெண்களுக்கு. ஏனெனில், விருந்தளித்தவர் வேறு யாரும் அல்ல ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் தான் அவர்.

மிஸ்கினா கருத்துக் கூறும்போது- எங்களுக்கு எமது அன்புக்குரிய பாட்டனார் ஸ்தானத்திலிருந்து, பல விடயங்களை அவர் எடுத்துரைத்தார். பொரிஸ் யெல்ட்சின் ரெனிஸ் விளையாட்டுப் பற்றி நன்கறிந்தவர். இதனால்தானோ என்னவோ அவர்களுடைய குறை நிறைவுகளைச் சுட்டிக்காட்டி, இன்றும் விளையாட்டில் மெருகேற்ற என்னென்ன செய்யவேண்டும் என்றும் அறிவுரைகள் கூறியுள்ளார்.

விம்பிள்டன் போட்டிகள் நடைபெறும் முதல் வாரத்தில், நான் அங்கு தான் இருப்பேன். உங்கள் ஆட்டங்களைப் பார்க்க வருவேன் என்றும், பொரிஸ் யெல்ட்சின் உற்சாகமாகக் கூறியிருக்கிறார். எனவே, நாங்கள் வென்றாகவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்கிறார் மிஸ்கினா.

தற்போது ரெனிஸ் ரஷ்யாவின் பக்கமாகப் போய்க்கொண்டிருக்கிறது போலத் தெரிகிறது. மிஸ்கினா பிரெஞ் ஓபன் வென்றார். மறுபுறம் மாரியா ஷேர்போவா, பேர்மிங்ஹம் சம்பியன்பட்டம் வெல்ல, இன்னொரு புறமாக சுவெற்லானா குஷ்நெட்சோவா, ஈஸ்ட்போன் கிண்ணத்தை வென்றிருக்கிறார்.

மிஸ்கினா தனது கருத்தாகத் தன் வெற்றிக்குப் பிறகு நிறைய யுவதிகள் ரெனிஸ் போட்டிகளில் தம்மால் சாதிக்க இயலும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர் என்கிறார். ரஷ்ய ரெனிஸ் கனவுக் கன்னி அன்னா கோர்னிகோவா எல்லோருக்கும் ஒரு சவாலாக இருந்தது உண்மை. ஆனால், அவர் மொடலிங் துறையில் கூடிய கவனமெடுத்ததும், நிறைய ரஷ்யப் பெண்கள் வேகமாக முன்னேறியதும் அவர் எங்களுக்கு அச்சுறுத்தல்களுக்கு அல்ல என்ற நிலைக்கு எம்மைக் கொண்டு வந்துவிட்டது என்கிறார்.

இறுதியாக மிஸ்கினா விம்பிள்டனில் கண் வைக்கிறார். தற்போதைய சம்பியன் ஷெரினா வில்லியம்ஸ் ஆபத்தானவர். அவர் கூடுதலான தாகம் கொண்டவராகவே இருப்பார். நானும் விடுவதாக இல்லை என்கிறார் மிஸ்கினா.

முன்னாள் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் இரண்டு யுவதிகளுக்கும் பிரெஞ்சுப் புரட்சி நடத்திக் காட்டியதுபோல, விம்பிள்டனினும் செய்து காட்டுவார்கள் என்று ஆணையிட்டுவிட்டார்.

எது நடக்கிறதோ அதுவேறு விடயம். ஆனால், இவ்வளவு ஆர்வம் கொண்ட, அதுவும் ஓய்வுபெற்ற பின்பும் விளையாட்டுக்களிலிருந்து ஓய்வுபெறாமல், கூர்ந்து அவதானித்து சரியான நபர்களை, சரியான நேரத்தில் கௌரவித்து, தன் உணர்வு இன்னும் ரஷ்ய மக்களுடன்தான் என்பதை நிரூபித்தாரே பொரிஸ் யெல்ட்சின் பெரிய மனிதர் தானப்பா அவர்.

- பிரணவன் -

ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. யூரோ 2004 உதைபந்தாட்டத் தொடரில் சம்பியன் கிண்ணம் வெல்லப்போகும் அணி எது?

விளையாட்டுப் புதிர் - 16

விண்ணப்பப்படிவம்.

முழுப்பெயர்:- .....

முகவரி:- .....

01.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 02.07.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விளையாட்டுப் புதிர் இல. 15 இன் விடைகள்

1) யூரோ 2004 உதைப்பந்தாட்டத் தொடர்.
2) சிம்பாப்வே.
3) டேவிட் பெக்கம்.

விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 14, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர் இ.ஷஸ்மிதா தியேட்டர்லேன், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.021-2227648, 0777166894.

கிரிக்கெட்டில் ஒரு மரதன் போட்டி

வரம்ப்ஷயர் கவுண்ரிக்காக விளையாடும் ஷேன்வோர்ன் துடுப்பாட்டத்தின்போது தனது இடது கையை பாதிப்புக்குள்ளாக்கிக் கொண்டது, அவரை இலங்கைக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலிருந்து தவிர்த்து விடுமோ என்ற சந்தேகத்தை உருவாக்கி இருந்தது. ஆனால், தற்போது அவர் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடுவார் என்பது நிச்சயமாகிவிட்டது போலத்தெரிகிறது. இவர் விளையாட வேண்டுமென்பதும், கிரிக்கெட் ரசிகர்களின் பெருவிருப்பமாகவும் இருந்தது. ஏனெனில், சாதனைகளைப் பொறுத்து சுடச்சுட நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டி ஷேன் வோர்னுக்கும் முரளிதரனுக்கும் இடையிலான விக்கெட் சரிக்கும் போட்டிதான். இலங்கை - சிம்பாப்வே டெஸ்ட் போட்டிகளில் கோட்னிவோல்சின் சாதனையை முறியடிக்க முரளிக்கு உதவிற்று. எனவே. 517 விக்கெட்டுக்களுடன் இருக்கும் ஷேன்வோர்ன் - 527 விக்கெட்டுக்கள் பெற்றிருக்கும் முரளியை இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளைப் பயன்படுத்தி முந்துவாரா என்பதே சுவையான எதிர்பார்க்கை. முரளி குறிப்பிட்ட இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவில்லை என்பதில் வோர்ன் பெறப்போகும் விக்கெட்டுக்கள் நிலைத்த இலக்கொன்றை நோக்கிச் செல்லப் போகின்றது.

ஷேன்வோர்ன்
"ஏதென்ஸ் போயிடாதிங்க"

தான் முரளியை முந்திச் சென்றாலும், அது தற்காலிகமானதாகவே இருக்கும் என்பதை வோர்ன் ஒப்புக்கொள்கின்றார். 32 வயதான முரளி இன்னும் ஐந்தாறு வருடங்கள் விளையாடும் வாய்ப்பு இருக்கிறது. அப்படிப் பார்த்தால் அவர் ஆயிரம் விக்கெட்டுக்களைச் சாய்த்தாலும் ஆச்சரியம் இல்லை என்கிறார்.

இது ஒரு புறம் இருக்க ஒகஸ்ட் மாதத்தில் தென்னாபிரிக்கா, இலங்கை வருகிறது. அப்போது முரளி அந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடுவது நிச்சயம். ஷேன்வோர்ன் இலங்கைக்கு எதிரான போட்டிகளில் முரளியை முந்தக்கூடும். அல்லது நெருங்கிவரக்கூடும். அதேபோல தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் முந்திய ஷேன்வோர்னை மீண்டும் முரளி முந்தக்கூடும். அல்லது முந்தியே இருந்தவர் இன்னும் சிறிது முன்னே போகக்கூடும். ஆகவே மொத்தத்தில் ஒரு விடயம் நிச்சயம். இன்னும் சில காலத்துக்கு இருவரும் முந்தியும், பிந்தியும் சிலவேளை பிந்தியும், முந்தியும் ஓடிக்கொண்டிருக்கப் போகிறார்கள். ஒருவகையான கிரிக்கெட் மரதன் ஓட்டப் போட்டி ஒன்று ஆரம்பமாகிவிட்டது. சில காலத்துக்கு இவர்கள் சார்ந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும்போது பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இவர்கள் இருவரின் எண்ணிக்கை தொடர்பாகவும் பாரிய விவாத அரங்குகள் இருக்கும். அவர்களுக்கு மரதன் ஓட்டம் - ரசிகர்களுக்கு நூறுமீற்றர் ஆர்வம்.

- பிரியா -

அர்த்தமற்ற அர்ப்பணங்கள்


"முரளியே சரணமா"

இலங்கை அணி அவுஸ்ரேலியாவுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் இல்லாமல் அவுஸ்ரேலியாவுக்கு சென்றுள்ளது.

இவ்வாறு அவுஸ்ரேலியா சென்றுள்ள இலங்கை அணி - முரளிதரன் இல்லாமல் விளையாடுவதற்குப் பயப்படுகின்றது போலுள்ளது. ஏனெனில், இலங்கை அணியின் தலைவர் அத்தபத்துவின் கூற்றுக்கள் இதனை ஓரளவு நிரூபிப்பதாக உள்ளது.

அவுஸ்ரேலியாவில் வைத்துப் பேட்டியளித்த அத்தபத்து - முரளி இல்லாமல் விளையாடுவதென்பது மிகவும் கடினமானதென்றும், அவர் களமிறங்கி விளையாடும் போது அணியின் சுமையில் பெரும் பகுதியைத் தாங்கிக் கொள்வார் எனவும் கூறுகின்றார்.

அத்துடன், அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தொடரை முரளிதரனுக்குத் தாங்கள் அர்ப்பணிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் நாம் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில் - முரளியின் கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் பல சோதனைகளைக் கடந்தே தற்போதைய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

ஆனால், இலங்கை அணி முரளி இல்லாமல் விளையாட முடியாத நிலையிலுள்ளது என்பதனைத்தான் ஏற்க முடியாமலுள்ளது.

ஏனெனில், தனிப்பட்ட ஒருவருக்காக அணியென்பது இல்லை. அணியிலுள்ள சகலரதும் கூட்டு முயற்சியே வெற்றியாகும். இதில் முரளி மட்டும் இலங்கை அணியை வழி நடத்திச் செல்கின்றார் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்திய அணியின் நாயகன் நடசத்திர சாதனைவீரர் சச்சின் டெண்டுல்கர் [illegible] காயங்களால் அவதிப்பட்டு அணியில் இல்லாமல் இருந்த போது இந்திய அணி மாற்று வீரர்களை அணியில் இணைத்து பலபோட்டிகளில் சிறப்பாக விளையாடியது என்றுகூட கொள்ளலாம்.

இதனைவிட மெக்ரா, பிரட்லீ, ஷேன் வோர்ன் இல்லாமல் அவுஸ்ரேலிய அணி சாதிக்கவில்லையா? தற்போது நடைபெறவுள்ள தொடர்களில் மெக்ரா சிறப்பாக தனது விளையாட்டை வெளிப்படுத்தாவிட்டால், அவரின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுமென அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே அவுஸ்ரேலிய அணியிலிருந்து சிறந்த துடுப்பாட்ட வீரர் மைக்கல் பெவன், பந்து வீச்சாளர் அன்ருபிக்கல் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

எனவே அத்தபத்து முரளிதரன் இல்லாமல் விளையாடுவது கஷ்டமானதாகவுள்ளதென்பது அர்த்தமற்ற ஒரு வார்த்தைப் பிரயோகமாகும்.

திடீரென முரளிதரன் கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை அறிவிக்கப் போகின்றார் என வைத்துக்கொள்ளலாம். அப்போது இலங்கை அணி முரளி இல்லாமல் விளையாட முடியாது என கலைக்கப்படுமா?

மற்றைய விடயமொன்றையும் நாம் இங்கே குறிப்பிட்டாகத்தான் வேண்டும். அது என்னவெனில், அண்மையில் இலங்கை வந்த அவுஸ்ரேலிய அணி இலங்கை அணியுடன் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. இதில் இலங்கை அணியில் முத்தையா முரளிதரனும் இடம் பெற்றிருந்தார். ஆனாலும், அவுஸ்ரோலியா 3 : 0 என்ற நிலையில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த நிலையில் தற்போது அவுஸ்ரேலியா சென்றுள்ள இலங்கை அணி இந்த டெஸ்ட் தொடரை முரளிக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக அத்தபத்து தெரிவித்துள்ளார். இதில் இலங்கை அணி வெறும் தோல்விகளையா? முரளிக்கு அர்ப்பணிக்கவுள்ளனர்.

டெஸ்ட் தொடர் நிறைவடையும் போது, அதற்கான உண்மை தெரிந்து விடும் அதுவரை பொறுத்திருப்போம்.

- யசோ -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்குத் திசையினிலே... இந்திரஜித்

சமாதானப் பேச்சுக்களில் அரசின் நிலைப்பாடு

போரா? சமாதானமா? என அரசாங்கத்திடம் கேள்வி கேட்கும் அளவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனாதிபதியின் சமாதான முனைப்புக்களில் தற்சமயம் நம்பிக்கை இழந்துள்ளனர்.

ஆரம்பத்தில் ஜனாதிபதியின் சமா

தான முனைப்புக்கள் நம்பிக்கை அளிக்கக்கூடியவையாக இருந்தாலும், தற்சமயம் அதில் பாரிய தேக்கநிலை ஏற்பட்டுளளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் - கடந்த அரசாங்கம் சர்வதேச அங்கீகாரத்துடன் விட்டுச்சென்ற சமாதான முனைப்புக்களையே மீண்டும் ஆரம்பிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். அதன்மூலம் வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்த முடியும் என்பதிலும் அவர்கள் உறுதியாக இருக்கின்றனா.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில், ஆரம்பத்தில் அவர் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டார். எனினும், பிந்திய காலப்பகுதியில் அதனை நிராகரிக்கும் அல்லது அது தொடர்பாக உரிய கொள்கையை தட்டிக்கழிக்கும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்.

இது இன்று இலங்கையில் சுமார் 2 வருட காலப்பகுதியின் பின்னர் போர்ச் சூழ்நிலையை உருவாக்கி வருகிறது. நாட்டில் அனைத்து இன மக்களும் போர் ஒன்று மீண்டும் ஏற்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஆனால், 20 வருடகாலப் போரின் தாக்கங்களை அவர்களில் பெரும்பாலானோர் மறந்து விட்டமையால், போருக்கு எதிரான தமது கொள்கையை அவர்கள் வெளிப்படுத்த முன்வராமல் இருந்து வருகின்றனர் என்பதையே காட்டுகின்றது.

இந்த நிலைப்பாடு - தென்னிலங்கை மக்கள் போர் ஒன்றை விரும்புகிறர்கள் என்ற உணர்வை, தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

அரசாங்கம் யுத்தம் ஒன்றை எதிர்பார்க்காதபோதும், தமது அரசியல் நடவடிக்கைகளுக்காக அதனை இலைமறைகாயாக மேற்கொண்டு வருகின்றது.

இது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை, தமிழீழ விடுதலைப் புலிகள் மத்தியில் இழக்கும் போக்கை வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே, அரசாங்கத்துக்கு தற்சமயம் பொறுப்புக்கள் பாரிய அளவில் உயர்ந்து நிற்கின்றன.

அரசாங்கம் தமக்கு எப்போதும் சவாலாக இருக்கும் எதிர்க்கட்சிகளை சமாளிக்கும் முனைப்புகளுக்கு உள்ளாகியுள்ளது. அதிலும் தற்சமயம் எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்திருப்பதால், எந்தநேரமும் அரசாங்கம் நிம்மதி இழந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

என்றாலும், எதிர்க்கட்சியினால் உடனடியாக ஆட்சி அதிகாரத்துக்கு ஆபத்து இல்லை என்ற நம்பிக்கையால் அது சற்று ஆறுதலை அடைந்துள்ளது.

சமாதான சீர்குலைவில் அரசாங்கமும், எதிர்க்கட்சியும்

நாட்டின் சமாதானச் சூழ்நிலை தற்சமயம் குழம்பிப்போயுள்ளது. வரலாற்றில் எப்போதும் சமாதான முனைப்புக்கள் ஆரம்பிக்கப்படும்போது, அரசாங்கமானது தமது எதிர்த்தரப்பில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் பலவீனமடைய வேண்டும் என்பதில் குறியாகவே இருந்து வந்துள்ளது.

ஆனால், அவ்வாறான முயற்சிகளில் இலங்கையின் அரசாங்கங்கள் அனைத்துமே தோல்வியையே தழுவிக்கொண்டன.

முன்னர் இவ்வாறான முனைப்புகளை அரசாங்கங்கங்கள் மேற்கொண்டபோது, சர்வதேசம் பெரும்பாலும் அரசாங்கத்தின் கருத்துக்கு மாத்திரம் மதிப்பளிக்கும் நிலைப்பாட்டை கொண்டிருந்தது.

ஆனால், தற்சமயம் அதில் பாரிய மாற்றமான சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன.

அரசாங்கம் கிழக்கில் இடம்பெற்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளை வலு விழக்கச் செய்யவேண்டும் என நினைததது. இதன் அடிப்படையிலேயே கருணாவுக்கு இலங்கை இராணுவம் அடைக்கலம் கொடுத்தது. இந்தத் தகவலை இதுவரை காலமும் அரசாங்கம் மறுத்து வந்தபோதும், இன்று அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் - இலங்கை இராணுவம் ஒருபோதும் கருணாவுக்கு உதவவில்லை எனத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அதனை முடிந்தால் நிரூபித்துப் பார்க்கட்டும் என்றும் அவர் சவால் விடுத்திருந்தார். இந்த நிலையில் கருணாவுடன் கொழும்புக்குச் சென்ற பெண் போராளிகளின் செவ்வி எல்லாவற்றையுமே வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா -கருணா குழுவினர் கொழும்புக்கு வர உதவினார் என்ற தகவலை, பெண் போராளிகள் தெரிவித்தமையை அடுத்து, ஐக்கிய தேசிய கட்சி ஒரு கணம் நடுங்கிப் போய்விட்டது. அதனால், உடனடியாக செயற்பட்டு அலிசாகிர் மௌலானாவை பதவியிறக்கி, தமது நிலைப்பாட்டை அந்தக் கட்சி தெளிவுபடுத்திக் கொண்டது. அதேநேரம் தமக்கு இந்த விடயத்தில் தொடர்புகள் இல்லையென காட்டும் முயற்சியில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயற்பட்டது. எனினும், பெண் போராளிகளின் கூற்றுப்படி தமக்குக் கொழும்பில் பாதுகாப்பு வழங்கியது இராணுவப் புலனாய்வுப் பிரிவே என்பதும், அதனை தம்மால் நிரூபிக்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்ததன் பின்னர் - அரசாங்கம் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கி தகவல் துறை அமைச்சராக இருக்கும் மங்கள சமரவீர - கருணா மட்டக்களப்பில் இருந்து தப்பிப்பதற்கு இலங்கை இராணுவம் உதவியது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனினும், இது அரசாங்கத்துக்கு தெரியாமல் மேற்கொள்ளப்பட்ட செயல் என்றும், அது தொர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கமும், எதிர்க்கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி, அதன் மூலம் சமாதானத்துக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது, அதேபோல் அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாத நிலைக்கு வந்திருப்பது - தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

எனினும், சமாதானப் பேச்சுக்களை முன்கொண்டு செல்லவேண்டுமானால், அரசாங்கம் கருணா தொடாபான பிரச்சினையை தமிழீழ விடுதலைப் புலிகள் திருப்தி கொள்ளும் வகையில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அதுவே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலையை விரைவில் நாட்டில் உருவாக்க உதவும்.

இதேவேளை, நாட்டில் தற்சமயம் இடம்பெறும் அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலான அதிகார இழுபறி மற்றும் பழிவாங்கல் முயற்சிகள் - தென்னிலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மையைத் தளாவடையச் செய்துகொண்டிருக்கிறது.

இது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், தமது நிர்வாக ஸ்திரத் தன்மையை அதிகரித்துக்கொள்ளு வாய்ப்பைப் பொற்றுக்கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உளவியல் கட்டுரை திருமதி பி.எவ்.சின்னத்தம்பி

தாழ்வு மனப்பான்மையும் நீக்கும் வழிமுறைகளும்

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது முதுமொழி. குழந்தைகளின் ஆரம்ப கால வாழ்க்கை மிக முக்கியமானது. அதில் ஏற்படும் தாக்கங்கள் மாற்ற முடியாதனவாகும். குழந்தைகளை பெற்றெடுத்தவுடன் பெற்றோர் சந்தோஷம் நிறைந்த பயனுள்ள வாழ்க்கையையும் கொடுக்கக் கடமைப்பட்டவராகின்றார்கள்.

இன்று நாம் எமது சமூகத்தை நோக்கின்- பார்க்கும் இடமெங்கும் பரிதாபமான தோற்றமும், ஏக்கமும், பயம் நிறைந்த பார்வையுமுள்ள குழந்தைகள் காணப்படுகின்றனர். வறுமையும், போர்க்காலச் சூழ்நிலைகளும், ஸ்திரமில்லாத பொருளாதார நிலையும் பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் தொகை அதிகரிக்கக் காரணமாகின்றது.

இவர்களில் பெரும்பாலானோர் தாழ்வு மனப்பான்மை எனும் கொடிய மனநோயால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பெற்றோர் குழந்தைகளுடன் தொடர்புள்ள உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் அக்கறையின்மையே காரணமாகின்றது.

குழந்தைகளிடத்தில் தாழ்வு மனப்பான்மை ஏற்படாமல் இருக்க சில காரணிகளை அறிந்து வைத்திருத்தல் அவசியம்

அளவுக்கு மீறிச்செல்லம் கொடுத்து வளர்த்தல்.

பிள்ளைகளிடத்தில் பெற்றோருக்குப் பாசம் இருப்பது இயற்கை. ஆனால் பெற்றோரில் சிலர் கேட்டவுடன் அனைத்தையும் கொடுக்கும் வழக்கம் உள்ளவராக இருக்கின்றனர். அதனால் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பை குழந்தை இழந்து விடுகின்றது. எனவே அறிவு, அனுபவம், திறமை என்பவற்றை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

வசதிபடைத்த பெற்றோர் இந்த விடயத்தில் ஜாக்கிரதையாக இருப்பது நன்று. அளவுக்கு மீறிய வசதிகளைக் கொடுத்துப் பழக்கிவிட்டு, கால சூழ்நிலையின் எதிரான பகுதிக்கு மாறும்போது அதில் ஏற்படும் பிரச்சினைகளைச சமாளிக்கக் குழந்தை தடுமாறுகின்றது. இதனால் தாழ்வுச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. குழந்தைகள் வசதிகளை அனுபவிக்கும் அதேசமயம், வசதியீனங்களையும், அதைச் சமாளிக்கும் பயிற்சிகளையும் வாழ்க்கையில் பெறவேண்டும். வாழ்வின் தாக்கங்களை எதிர்கொள்ளத் திராணியற்றுப் போகும்போது தாழ்வுமனப்பான்மை தானே ஒட்டிக்கொள்கின்றது. குழந்தை வளர்ந்து பெரியவனானபின் சமூகத்துடன் ஒட்டிவாழப் பெற்றோர் பார்த்துக்கொள்ள வேண்டும். அளவுக்குமீறிய செல்லம் குழந்தைகளைச் சோம்பேறிகளாக்கி விடும் என்ற உண்மையைப் பெற்றோர் உணரவேண்டும்.

சோம்பேறித்தனம் - தாழ்வு மனப்பான்மை தோன்ற அடிப்படைக்காரணியாகிவிடும்.

அளவுக்கு மீறிய கட்டுப்பாடு

குழந்தைகள் சுயாதீனமாகச் செயற்பட வேண்டியவர்கள். அவர்களை அடிமைகள் போல நடத்தக்கூடாது. அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் குழந்தை சுயமாகச் சிந்திக்கும் திறனை அழித்துவிடும். அதைச் செய்யாதே, அங்கே போகாதே, அவர்களோடு சேராதே, விளையாடப் போகாதே என்று நிமிடத்துக்கு நிமிடம் கட்டளைகள் கொடுத்தும், மீறும்போது கண்டிப்பதனாலும் பிள்ளையின் உள்ளம் பாதிப்படைந்து விடுகிறது.

இதனால் மற்றக் குழந்தைகளின் திறமைகளைக் கண்டு தம்முள்தாமே தாழ்வுணர்வை வளர்த்துக் கொள்கின்றனர். இதனால் அவர்களுடைய வளர்ச்சியும், திறமையும் பாதிக்கப்படுகின்றன. நாளடைவில் மற்றவர்கள் போல தாம் இல்லையே என்ற தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகின்றனர்.

பெற்றோருக்குத் தம் பிள்ளைகள் நன்றாக வரவேண்டும் என்ற ஆசைகள் இருப்பது இயல்பு. தமக்குக் கிடைக்காத படிப்பு, உத்தியோகம். தன் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டுமெனப் பெற்றோர் எண்ணுவதில் தவறில்லை. ஆனால், குழந்தைகளின் இயல்புகளுக்குப் பொருத்தமற்ற தன்மைகளை அவர்கள் மீது திணித்துக் கட்டாயப்படுத்தும்போது தன் பெற்றோரின் அபிலாஷைகளை நிறைவேற்றமுடியாது பிள்ளை திணறுகின்றது.

நாளடைவில் தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளாகின்றது. எனவே இந்தப் பிள்ளைகளின் இயல்புக்கு மாறாக, பொருத்த மற்றவற்றைச் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்துவதைப் பெற்றோர் தவிர்ப்பது நன்று.

அளவுக்கு மீறிய பாதுகாப்புக் கொடுத்தல்

இதனால் குழந்தை தைரியத்தை இழந்து விடுகின்றது. சொந்தக்காலில் நிற்கும் தைரியம் அற்றுப்போகின்றது. குழந்தையை தனியாகச் செயற்படவிடாது அளவுக்குமீறிப் பாதுகாப்புடன் வளர்க்கும்போது அது வளர்ந்ததும் பிரச்சினையை சமாளிக்க முடியாது திண்டாடுகின்றது.

சிறு வயதிலே குழந்தையைப் பயப்படாது செயற்படவிடவேண்டும். 'எதையும் செய்வேன்' என்ற துணிச்சல் பிள்ளைக்கு இருக்கவேண்டும். தைரியமற்றதாக வளர்க்கப்படுவதனால் பிறரின் கேலிக்கு ஆளாகி தாழ்வுமனப்பான்மை உடையதாகின்றது.

ஏனைய குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பேசுதல்.

பெற்றோரில் அநேகர் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி, அவர்களைப் போல படிக்கவில்லை, சித்தியடையவில்லை எனப் பேசுவது வழக்கம். மற்றக் குழந்தைகளை புகழ்ந்து பேசும்போது தன் திறமையற்றவன் என்ற எண்ணமே பிள்ளைக்கு ஏற்படுகின்றது. இதனால், தன்னுள்ளே தாழ்வுணர்ச்சியை வளர்த்துக்கொள்கின்றது. இத்தகைய எண்ணங்கள் தோன்றவிடாது அவர்களைப் புரிந்து 'உன்னாலும் முடியும்' என ஊக்குவிக்கவேண்டும்.

குழந்தைகளைக் கோவிப்பதாலும், மட்டந்தட்டிப் பேசுவதாலும் அவர்களின் முயற்சிகள் பயனற்றுப்போக, தாழ்வுணர்ச்சிகள் வளர்கின்றன. இவற்றை நீக்கமுயற்சிக்க வேண்டும்.

பொதுவாகக் குறைகூறுவதைத் தவிர்த்து, பிள்ளைகளைப் புகழ்ந்து பேசப்பழக வேண்டும். குழந்தை சிறிய விடயங்களைச் செய்தாலும் கெட்டிக்காரன் எனப் புகழும்போது, அந்தக் கணிப்பை மீண்டும் மீண்டும் எதிர்பார்த்துக் குழந்தை செயற்பட ஆரம்பிக்கும். மாறாக உனக்குப் புத்தியில்லை என அடிக்கடி கூறுவதால் குழந்தை நம்பிக்கை இழக்கவும் வாய்ப்புண்டு.

பெற்றோர் பிள்ளையின் மனதில் நம்பிக்கையூட்டி, தைரியமூடடக் கடமைப்பாடுடையவர்கள். சின்னஞ்சிறு வயதில் ஊட்டப்படும் நம்பிக்கை, தைரியம் அபாரசக்தி வாய்ந்தது. இதுவே வாழ்வின் பிற்காலப் போராட்டங்களில் வலிமையுடன் எதிர்த்துப் போராடக்கூடிய சகதியை அளிக்கின்றது. சிறு குழந்தையைப் புகழ்ந்து கூறும்போது மென்மேலும் உற்சாகத்துடன் செயற்பட ஆரம்பிக்கின்றது.

குழந்தைகளை அலட்சியப்படுத்தாது அக்கறை காட்டல்

குழந்தை கற்பனை உலகில் நுழைந்து தமது உள்ளக்கிடக்கைகளை - எண்ணங்களை கூறும்போது அதை அலட்சியப்படுத்துவது உளப்பாதிப்பை உண்டுபண்ணுகிறது.

சில பொருட்களையோ அல்லது செயல்களையோ செய்துவிட்டு, அதை வீட்டில் உள்ளவர்களிடம் காட்டும்போது கூறும் சந்தர்ப்பங்களிலும் உற்சாகமாகக் கேட்டு ஊக்குவிக்க வேண்டும். பெற்றோர்கள் தம் செயல்களை அக்கறையுடன் அவதானிக்கின்றனர் என எண்ணும்போது அதிக கரிசனையுடன் செயற்படுவதை அவதானிக்கலாம். தமது நோய், வறுமை, பிரச்சினைகள் காரணமாக குழந்தைகளை வெறுத்து ஒதுக்குவதும், பாகுபாடு காட்டுவதும் தவறானது என பெற்றோர் உணர வேண்டும்.

தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தல்

குழந்தை தனது முயற்சிகளில் தோல்வி [illegible] சந்தர்ப்பங்களில் கலங்கும்போது [illegible] தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும். தோல்விகளையும், ஏமாற்றங்களையும் ஏற்றுக் சந்தோஷமாக இருப்பதனால் மன நிறைவு பெறுகின்றனர். வாழ்வில் முன்னேற்றத்துக்கு மகிழ்ச்சிகரமாக இருத்தல் அவசியம்.

குழந்தைகளைப் பொறுத்தமட்டில் வீட்டில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். குழந்தைகளில் தாழ்வு மனப்பான்மை வளர - வீட்டு சூழ்நிலையும் முக்கியகாரணமாக அமைகின்றது.

பலனை எதிர்பார்க்காது முயற்சிகளை மேற்கொள்ளப்பழகுதல்

பொதுவாக தாம் நினைப்பவை அனைத்தும் நடைபெற வேண்டும் எனக் குழந்தைகள் எதிர்பார்ப்பது இயல்பு. இதற்காக அடம்பிடித்து அழுவதை நாம் காணலாம். ஆனால் சிறுவயதிலிருந்து போதுமென்ற மனநிலையை குழந்தைகளுக்கு பக்குவமாக ஊட்டிவரவேண்டும். கிடைப்பத்தில் திருப்திகாணும் தன்மையை குழந்தைகள் பெறவேண்டும். இந்த மன நிறைவு - தாழ்வு மனப்பான்மையை அகற்றிவிடும்.

குழந்தைகளை வழிநடத்தும்போது குழந்தைகள் தம்மை உயர்வாகவே கருதமுற்படுவர். சிறுவயதிலிருந்தே நாடகம், நடனம், சங்கீதம் போன்ற கலைகளில் விருப்பை உண்டுபண்ணி ஊக்கமளிக்கும் போது, திறன்கள் வளர வழி கிடைக்கின்றது.

இதனால் தன் திறமைகளைக் குழந்தை வெளிக்காட்டும்போது தாழ்வு மனப்பான்மை நிலை விலகிச் சென்றுவிடும். தங்களை உயர்வாகக் கருதிச் செயற்பட ஆரம்பிப்பர். தாழ்வு மனப்பான்மை வளர்ந்து கொண்டேபோயின் குழந்தைகளின் எதிர்காலம் பாதிப்புக்குள்ளாக நேரிடும்.

நன்றி - கல்வியில் முன்னேற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்
எஃகுஅதனிற் கூரியது இல்.

திருக்குறள்

நமது நோக்கு

காலத்தின் கடமை

யாழ்.குடாநாட்டின் மீது சுமார் ஒரு தசாப்த காலமாக விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடை, ஏ9 பாதை திறப்புடன் முடிவுக்கு வந்தது.

பொருளாதாரத்தடை நிலவிய காலத்தில் யாழ்ப்பாணம், வன்னிப் பகுதிகளில் நவீன பொறிமுறைகள், கைத்தொழில்கள் முற்றாகவே ஸ்தம்பிதம் அடைந்துபோனது.

ஆனால் சிறிய, நடுத்தரக் கைத்தொழில்கள்தான் இந்தப் பொருளாதாரத்தடைகளின் மத்தியிலும் குடாநாடு - வன்னிப்பகுதி மக்களின் வயிற்றுக்குச் சோறுபோட்டு வளர்த்தது.

அப்போதைய யுத்தசூழல் இத்தகைய சிறிய, நடுத்தர கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு பெரிதும் தடையாக இருந்தது. ஆனால் ஏ9 பாதை திறக்கப்பட்டு - பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்பட்டு விட்டபோதும், இத்தகைய கைத்தொழில்களால் முன்னேற்றத்தை எட்டமுடியவில்லை.

பொருளாதாரத் தடைநீக்கத்துடன் ஏ9 வீதித்திறப்பு -உள்ளூர் சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களின் மாபெரும் அழுத்தத்தைக் கொண்டுவந்துள்ளது.

இதனால், உள்ளூர் மூலவளங்களைக்கொண்டு உற்பத்திகளில் ஈடுபடும் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டது.

தென்னிலங்கையில் இருந்தும் - சர்வதேச சந்தையில் இருந்தும் வந்துகுவியும் உற்பத்திகளால் உள்ளூர் உற்பத்தியாளர்கள், அவற்றுடன் போட்டியிட முடியாதநிலை நீடித்தது.

உள்ளூர் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களால் தாராள உற்பத்திகள் மேற்கொள்வதற்கு வசதிவாய்ப்புககள் இருந்தும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி வசதிகள் இல்லாது இருப்பது பெரும் குறைபாடாகும்.

இத்தகைய சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடந்த காலங்களில் கடன் தொகைகளை வழங்குவதில் அரசு, தனியார்துறை வங்கிகள் போதியளவு உதவவில்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக உள்ளது.

யுத்தகாலத்திலும், குடாநாட்டு மக்களிடம் இருந்து சேமிப்பாகப் பெற்ற பலநூறுகோடி ரூபாவை இங்குள்ள மக்களுக்கு வங்கிகள் கடனாக வழங்காமல் - தென் பகுதிக்கு அனுப்பியிருந்தன.

இப்படியானநிலை இப்போதும்கூட பெருமளவில் மாற்றம்பெறவில்லை. இப்போது குடாநாட்டில் அரச தனியார் வங்கிகளுக்கிடையில் அதிகரித்துள்ள போட்டி காரணமாக பொதுமக்களை வங்கிகள் கவர்ந்திழுக்கும் நோக்கில் கடன்வசதிகள் வழங்க முன்வருகின்றன.

தென்பகுதியில் சிறிய, நடுத்தர முதலீட்டாளர்களுக்கு வங்கிக் கடன்கள் பெருமளவில் வழங்கப்படுவது, முயற்சியாளர்களின் வளர்ச்சிக்கு அதிகம் உதவியாக இருந்திருக்கிறது.

இதேபோன்று, குடாநாட்டிலும் சேமிப்பாகப் பெறப்படும் பணத்தை இங்குள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு கடனுதவியாக வழங்குவதற்கு வங்கிகள் முன்வரவேண்டும்.

இத்தகைய கடனுதவிகளை வழங்க சில வங்கிகள் நடவடிக்கை எடுக்கப்போவதாக வாக்குறுதிகளை அளித்திருக்கின்றன. கேட்பதற்கு செவிக்கினிய செய்தியாக இருந்தாலும், செயல்வடிவம் பெறுகின்றபோது தான் இங்குள்ள முதலீட்டாளர்கள் நன்மைகளைப் பெறமுடியும்.

இனிவரும் காலத்திலாவது அரச, தனியார்துறை வங்கிகள் குடாநாட்டு மக்களின் தொழில்சார் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டவேண்டும்.

இவ்வாறு கடன் உதவிகளை அதிகமாக வழங்கும் போதும் - இன்னொரு வகையிலும் வங்கிகள் தமது சேவையை இலகுபடுத்தவேண்டும்.

முயற்சியாளர்களுக்கு கடன்களை வழங்கத் தயார் என்று அறிவித்துவிட்டு இருந்தால் மட்டும்போதாது. ஒவ்வொரு தொழில் முயற்சிக்கும் கடன் உதவிகளை வழங்கும் போது அதைத் திருப்பிச்செலுத்துவதற்கான இலகுவான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

மேலும், வங்கிக் கடன்களைப் பெறும் நடைமுறையில் பலத்த நிர்வாகச் சிக்கல்களையும், பிணைபோன்ற பிரச்சினைகளையும் எதிர்நோக்கவேண்டியிருக்காது.

இந்தநிலையில் பெருமளவானோர் கடன்களுக்கு வங்கிகளை நாடுவதில்லை. எனவே, இலகுவான நடைமுறைகளை அமுல்படுத்தி உள்ளூர் சிறிய, நடுத்தரக் கைத்தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு வங்கிகள் உதவவேண்டியது அவசியமாகும்.

அப்போதுதான் பிரதேச அபிவிருத்திகளை துரிதப்படுத்த முடியும். வங்கிகள் வளர்ச்சிபெற உதவிய மக்கள் - வளர்ச்சி பெறுவதற்கு வங்கிகள் உதவவேண்டியது காலத்தின் கடமையல்லவா.

நாடும் நடப்பும்



அம்பன் அரசினர் வைத்தியசாலையை மீளவும் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் அரசினர் வைத்தியசாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2000ஆம் ஆண்டு முதல் இந்த வைத்தியசாலை இயங்காமல் உள்ளது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த வைத்தியசாலை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

போர் நடவடிக்கைகளினால் சிறிது சேதமடைந்த இந்த வைத்தியசாலையைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும், இதுவரை எந்தவித திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வைத்தியசாலை புனரமைக்கப்படாததன் காரணமாக அம்பன் குடத்தனை, நாகர்கோவில், மணற்காடு பகுதி மக்கள் சுகாதார வசதிகளைப் பெறுவதில் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

வடிகால் மூடிகள் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்துக்குப் பெருஞ்சிரமம்

(கொக்குவில்)

யாழ். கடற்கரை வீதி, மவுண்கார்மேல் வீதிச் சந்தியில் அமைந்துள்ள வடிகால் மூடிகள் சேதமடைந்து பல மாதங்களாகியும் இன்னமும் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி இது சம்பந்தமாக யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டுப் பல மாதங்களாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் இந்தப் பாதையில் போக்குவரத்துச் செய்கின்ற மக்கள் வடிகாலில் வீழ்ந்து காயங்களுக்கு உள்ளாவதுடன், வாகனங்களும் சேதமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (206)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுப்பு

(சுதுமலை)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையினர் பொதுப்பணிகள், கலை நிகழ்வுகள் மாணவர்களுக்கிடையேயான போட்டிகளை நடத்தவுள்ளனர்.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வீதிகள், மயானங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்வதுடன், பாடசாலை மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளதுடன், நூலகக் கண்காட்சியும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளனர்.

பிரதேச சபைக்குட்பட்ட சிறந்த உணவகங்கள், சிறந்த தொழிற்சாலைகளுக்கு பரிசு வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (91)

நெய்தல் விழாவை முன்னிட்டு கவிதை, சிறுகதைப் போட்டிகள்

(கொக்குவில்)

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி எடுக்கவிருக்கும் "நெய்தல் விழா 2004"ஆம் ஆண்டைச் சிறப்பிக்குமுகமாக கவிதை, சிறுகதைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கவிதைகள் "புதியதோர் சமுதாயத்தைக் காண எழுவோம்" எனும் கருப்பொருளை மையப்படுத்தி ஏ4 தாள்களில் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

சிறுகதை சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மையப்படுத்தி 2000 சொற்களுக்குள் எழுதப்படவேண்டுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

மேலும், விபரங்களை அறிவதற்கு செயலாளர் ம.குயின்ரன் குருநகர், முன்னேற்ற ஐக்கிய முன்னணி எனும் முகவரியில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (206)

வலி. தென்மேற்கு பிரதேச சபையால் 200 பயன்தரு மரங்கள் அன்பளிப்பு

மத்திய சூழல் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, வலிகாமம் தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபையினரால் 200 பயன்தரு மரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், வர்த்தகர்கள் ஆகியோருக்கு. வழங்கப்பட்ட பயன்தரு மரங்களில் தேக்கு, சமண்டல், மகோக்கனி, சவுக்கு ஆகிய மரங்களே வழங்கப்பட்டன.

உள்ளூராட்சி உதவியாளர் செரமேஸ் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இந்த நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையைச் சேர்ந்த வ.குமுதினி, மத்திய சூழல் பாதுகாப்பு பொறுப்பாளர் பொ.ஐங்கரநேசன், பொருண்மியப் பகுதி இணைப்பாளர் சோதிநாதன், பிரதேசசபை செயலாளர் பி. விக்டர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

காரைநகருக்கு இரும்புப் பாதையிலான படகுகளை சேவையிலீடுபடுத்த முடிவு

காரைநகருக்கு இரும்புக் கம்பியினாலான பாதைப் படகுகளை சேவையிலீடுபடுத்த புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு, ஜோன்சன் என்ற பிரிட்டிஷ் பொறியியலாளர் கம்பனி, இரும்பினாலான பாதைப் படகுகளைத் தயாரித்து வழங்கவுள்ளது.

திருகோணமலையில் கிண்ணியாவிலும், தலைமன்னாரிலும் கூட இந்த வகையான இரும்புப் பாதைப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

ஏற்கனவே கிண்ணியாவுக்கான பாதைப் படகு தயாரிக்கப்பட்டுவிட்டது. இது 600 மீற்றர் நீளமும், 10 மீற்றர் அகலமும், கொண்டது. 85 தொன் பாரத்தை ஏற்றி இறங்க வல்லது. 120 குதிரை வலுக் கொண்ட இரு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இந்தப் படகில் பிரயாணிகள் உட்பட 8 லொறிகளையும் ஏற்றி இறக்க முடியும். பிரயாணிகளுக்கு இருக்கைகளும் உள்ளன.

ஏனை[illegible] படகுகளுக்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போதுமான ஆதாரம் இருந்தால் யாரையும் கைது செய்யலாம்

- ஜே.வி.பி. கூறுகிறது

நாட்டின் சட்ட திட்டத்தை மீறும் எவரையும், பொலிஸார் போதுமான ஆதாரங்கள் இருந்தால் கைது செய்யலாமெனவும், இதற்கு நீதிமன்றின் பிடியாணை உத்தரவு தேவையில்லையெனவும் ஜே.வி.பி. தெரிவித்தது.

இது தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்ட பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் தவறு செய்தால் அவர்களை கைது செய்ய பொலிஸார் செல்லும்போது அவர்கள் தமது நாடாளுனமன்ற உறுப்பினர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தக் கைது நடவடிக்கையை தவிர்க்கவோ அல்லது பொலிஸாரின் கடமைகளில் தலையிடவோ கூடாது.

எனவே, குற்றம் செய்தவர்களைக் கைது செய்வதற்கு பொலிஸாரிடம் போதுமான ஆதாரங்கள் இருந்தால் அவர்கள் அந்த நபரை கைது செய்யலாமெனவும், அதற்கு நீதிமன்றின் பிடியாணை உத்தரவு தேவையில்லையெனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நோக்கு.. - கனகரவி

எந்தப் போரையும் வெற்றிகொள்ள பலமொன்றே வேண்டும்

சமாதானம், பேச்சுவார்த்தை என்பவற்றினால் ஏமாற்றும் திட்டம் தான் செய்யப்படுகின்றதோ? என்ற கேள்வியுடன் தமிழினம் ஏங்கிக்கொண்டிருக்க வேண்டுமென சிங்கள தேசம் விரும்புகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக இன்றைய அரசியல் போக்கினைப் பார்க்கின்றபோது தெரிகின்றது.

பேரினவாத சக்திகள் இன்று வித்தியாசமான ஒரு போரினைத் தொடுத்துக் கொண்டுள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டுவரவில்லையென்றால்.. தமிழினம் விரும்புவதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் நிலைவரும்.

போர் நிறுத்த உடன்படிக்கை உள்ளது. போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் கடமையில் உள்ளனர். இந்தவேளை - என்ன போர் நடக்கின்றதென கேள்வியொன்று வருவது இயல்பானதே. அதனைச் சற்று விரிவாகவே பார்க்கவேண்டும். தமிழரைப் படை நடவடிக்கைகள், குண்டு வீச்சுக்கள், எறிகணை தாக்குதல்கள் மூலம் தமது அதிகாரத்துக்குள் வைத்துக் கொண்டு அடக்கி ஆளலாம் என எண்ணி ஆயுதத்தை வைத்தே அடகி துன்பப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆயுதப்படையினர்.

போர் நிறுத்தப்பட்டிருந்தவேளை, தமது அதிகாரப் பாய்ச்சல் பறிபோய் விட்டது. மக்கள் தம்மை கௌவரப் படுத்தமாட்டார்கள் என்ற வறட்டுக் கௌரவம் ஒன்று ஏற்பட்டது. இதனை ஓரளவுக்கு சீர்செய்வதற்குத் தான் மக்களை அச்சமூட்டியும், குழப்பியும் தமது செயற்பாட்டை திட்டமிட்டு மக்கள் மீது பிரயோகிக்கின்றனர். இதன் ஒரு வடிவமாக கிழக்கு நிலைமையினை உண்மைக்குப் புறம்பாக செய்திகளை வெளியிடுவதன் மூலம், தமது அதிகாரச் செயற்பாடுகளை, மக்களை நோக்கிச் செயற்படுத்தலாமென எண்ணுகின்றன.

உண்மை என்னவெனில் நீண்ட போரின் விளைவாக தமிழர் தாயகத்தின் தன்மை பல உறுதிமிக்க தன்மையினைக் கொண்டதாக உள்ளதை மறுதலித்து விடமுடியாது. மக்களை நாடி பிடித்தறியத் தேவையில்லை. மக்கள் பல்வேறான அனுபவங்களுடன் எந்த விதமான செயற்பாடுகளையும் எதிர்கொள்ளத்தக்கவர்களாகவுள்ளனர்.

ஆகவே, மக்களின் மன இணைவு தெளிவாக ஒருவரை ஒருவர் தொடுத்துள்ளதாக உள்ளதனால், புலனாய்வுப் போரின் மூலமாகத் தமிழரை ஒடுக்குவதற்கான போர் தொடர்ந்து கொண்டுள்ளது. இதனை உறுதி மிக்க அனுபவ அறிவியலால் தமிழர் தோற்கடிப்பர் என்பது வரலாற்றுப் பாடமாக வரும். ஏனென்றால், தமிழரின் பேச்சை உலகம் கவனிக்க, இன்று தவறாத சூழ்நிலையினை காணமுடிகின்றது. உண்மையில் இங்கு மக்கள் எப்படியான அரசியல் சிந்தனையுள்ள வர்களாக இருக்கின்றனர் என்பதை உலக அரசியலாளர்கள் விளங்கிக் கொள்ளாதவர்கள் இல்லை.

எனினும், எம்மீதுள்ள ஐயப்பாடுகளை களையும் காலமாக தமிழர் இதனைப் பயன்படுத்த வேண்டுமே தவிர மனச்சலிப்புக் கொள்ளக்கூடாது.

எந்தச் சூழ்நிலையும் சாதாரணமாக வந்ததல்ல. தமிழினம் தனது விடுதலைக்காகக் கொடுத்த விலை கொஞ்சமல்ல. களத்தில் போராடியும், பேரினவாதிகளின் ஒடுக்குமுறைக் கரங்களின் கோரப்பிடிக் குள்ளிருந்தும் விடுபட எமது இனம் கொடுத்த விலை? இன்று சிலர் பட்டதுன்பத்தை மறந்து, இன்றிருக்கும் சூழ்நிலை இப்படியே இருந்து விட்டால் போதும் என்று எண்ணுகின்றவர்கள் உள்ளனர்.

இதற்காகவா சுமார் ஒரு லட்சம் உயிர்கள் வரை விலையாக கொடுத்ததென்று அசைபோடுவதுகூட காலத்தின் தேவை. ஆகவே, இப்படியான சிந்தனையுடன் போரை எப்படி எதிர்கொண்டோமோ, அரசியலை எவ்வாறு கையாண்டோமோ. அதேபோல் புலனாய்வுடனான பரப்புரைத் தாக்குதலையும் எதிர்கொண்டு வெல்ல வேண்டியது தமிழரின் கடமையாகும்.

தென்னிலங்கையில் இருக்கும் பேரினவாதிகளின் செயற்பாடு களுக்கு காலத்துக்கு காலம் முண்டு சாய்க்க யாராவது ஒருவர் முன்வந்துவிடுகின்றனர்.

எவர் எங்கு நின்றாலும், மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் வெற்றியைக் காணமுடியாது. புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளை குழப்புவதற்கும், உளவியல் ரீதியான தாக்கங்களை கொடுப்பதற்கும் கூட மிகவும் திட்டமிட்ட முறையில் சில கோடரிக் கம்புகளை வைத்து மன இணைவினைத் தறிக்கும் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. எமது மண்ணில் என்ன நடைபெற்றுள்ளதென்பதை எங்களுடைய மக்கள் எங்கிருந்தாலும் மறந்து போகின்றவர்கள் இல்லை. எனினும் எமது இன அடையாளம் பற்றிய சிந்தனை இல்லாமல் உலகில் எங்கோ ஓர் மூலையில் வாழ்ந்து முடித்துவிடலாம் என எண்ணுவது வருங்கால எமது இளம் சமூகத்துக்கு செய்யும் துரோகமே ஆகும். ஆகவே, எமது மண்ணில் என்ன நடந்தது? என்ன நடந்து கொண்டிருக்கின்றனதென நாம் கவனிக்காமல் ஏனோ தானோ என்று இருந்து விடக்கூடாது.

சமாதான விரும்பிகள் என்று உலக வாசலுக்குக் கொண்டுசெல்ல முற்படும். உண்மைக்கு புறம்பான விடயங்களை பேரினவாதிகள் கைவிடாது தொடர்ந்தும் ஏதோ ஒரு வகையில் தமிழரை ஒடுக்க நினைத்தால், தமிழர் அதனை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை. உலகின் எந்த மூலை முடுக்கில் தமிழினம் இருந்தாலும், தெளிவுடனும், உறுதியுடனும், உணர்வுடனும் இன்றைய நிலைமையினை கருத்தில் எடுத்து, செயற்படவேண்டும். எவர் எதனைச் சொன்னாலும் களத்தில் என்ன நடக்கின்றது என்பதை கவனிக்க வேண்டுமே தவிர, ஏதோ ஒரு வகையில் ஒடுக்குமுறை யாளர்களின் தின்று கழிப்பறைக்கு மட்டும் போக எண்ணும் சிந்தனை செத்தவர்களைப் பற்றி துளியெனவும் கருத்தில் எடுக்கவேகூடாது.

பல்லாயிரம் உயிர்கொடுத்துக் கட்டிய கோபுரத்தைப் போற்றிப் பாதுகாக்க தமிழர் என்றென்றும் வலுமிக்க வராய் இருக்க வேண்டும். தமிழரையும், தாய் மண்ணையும் அதற்காக உயிர் கொடுத்தவர்களையும் இறுதி மூச்சு வரை எவரும் மறந்து விடக்கூடாது.

போலிகளையும், பொய்களையும் ஒருபுறம் தள்ளிவிட்டு அறமும், வீரமும் வெல்லும் என்று ஓரணியில் பேரணியில் திரண்டு கொள்வதன் மூலம் மட்டுமே, எவர் எவ்வாறான போரைத் தொடுத்தாலும் தமிழினத்தால் விடுதலையினை வென்றெடுக்க முடியும்.

கந்த முருகேசனார் கண்ட கனவு நனவாவது வெகுதூரத்தில் இல்லை

தமிழினம் தன்னாட்சி பெற வேண்டும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்று அன்று முதறிஞர் கந்த முருகேசனார். கண்ட கனவு தூரத்தில் இல்லை என பண்டிதர் பரந்தாமன் தெரிவித்தார்.

தென்புலோலி முதறிஞர் கந்த முருகேசாரின் 39 ஆவது ஆண்டு நிறைவு தினம் மந்திகை சந்தி கந்த முருகேசனார் சிலையடியில் எஸ்.திருச்செல்வம் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பண்டிதர். பரந்தாமன் தொடர்ந்து பேசுகையில் தமிழினம் தன்னாட்சி பெறவேண்டும் என்னும் தாகத்தை முன்னெடுத்துச் சென்று பூர்த்தி செய்ய பெரியோர்கள், சான்றோர்கள், பாவலர்கள் எல்லோரும் பாடுபடவேண்டியது அவர்களது கடமையாகும். கந்தமுருகேசனார் எனது குருவாக விளங்கியவர். அவரது பாரம்பரியத்தில் கடைசி ஆள் நானா கத்தான் இருக்க முடியும்.

தமிழ் மொழியையும், தமிழர் பண்பாட்டையும் வளர்க்க அவர் பெரிதும் உழைத்தவர். தமிழுக்காக உழைத்தவர்களை நினைவு கூற மறப் போமானால் நன்றிக் கடன் மறப் போராவோம். அவர் தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்த சேவையை என்றும் மறக்காதிருக்கவே இந்த நினைவு நாளை கொண்டாடுகிறோம்.

கந்தமுருகேசனார் முடமாக இருந்த மோதிலும் திண்ணைப் பள்ளிக் கூடத்தை நடாத்தி பாலர் வகுப்பு தொடக்கம் பண்டிதர் வரையிலான கல்வியை கற்பித்து புலவர் ஒளி என்ற புலோலியின் பெயரைத் தங்க வைத்தவராக விளங்கினார். அவரிடம் படித்தவர்கள் பெரிய பதவிகளிலும், நல்ல வாழ்வோடும் இருக்கிறார்கள்.

கந்தமுருகேசனார் பணியை அவர் பெயரில் தொடர்ந்து வளர்த்து எடுக்க வேண்டும். அன்னார் ஆற்றிய கல்வி பணியை நிலைநிறுத்த மணி மண்டபம் ஒன்றும், நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். அப் போதுதான் அவர் பணி தொடரக்கூடியதாக இருக்கும் என்றார்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராமையா பேசுகையில்,

கந்தமுருகேசனை பற்றி அறிந்துள்ளேன். அவரிடம் படித்த மன்னவன் கந்தப்பு, கரவை கிழான் உட்பட பலருடனும் நான் உரையாடி போது அவரது பெருமையையும், அறிவையும் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

அவர் விட் டுச்சென்ற பணியை எடுத்துச்சொல்ல வேண்டிய பொறுப்பு எங்களுடையதாகும். அவரது நினைவாலயத்தையும், மண் டபத்தையும், நூல் நிலையத்தையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு இந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்கள் தங்களால் இயன்ற உதவிகளை செய்யும் என்றார்.

இளைப்பாறிய மாவட்ட கடற்தொழில் பரிசோதகர் எஸ்.கதிர்காமத்தம்பி, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி சு.மயிலேறும் பெருமாள், பருத்தித்துறை சட்டத்தரணி சங்கத் தலைவர் இ.உருத்திரா, யாழ்.செயலக தலைமை காரியாலய உதவி அரசாங்க அதிபர் வி.வீரகத்திபிள்ளை ஆகியொரும் உரையாற்றினர். கந்தமுருகேசனார் நினைவு தினத்தை முன்னிட்டு பருத்தித் துறை பிரேசேசனை நூலகவளாகத்தில் மாக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

ஒரு நிமிடம் சிந்திப்போம்...

குற்றச் செயல்களை தடுப்பது பற்றி சிந்திப்போமா

வறுமையுற்றவர்களை நேசிக்க வேண்டியது மனிதத்தன்மை. நேசிப்பு தான் உறவை வளர்க்கும். ஆனால், அதற்கு மேலாக எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டியதும் சிறப்பானது.

எமது அன்றாட வாழ்வில் எவ்வளவோ உணவுப் பொருட்களை அளவுக்கதிகமாக தயாரித்து வீணே கொட்டுபவர்களாக இருக்கின்றோம். இது எமது மனச்சாட்சிக்கு தவறாகபட்டாலும் அவற்றைச் செய்யத் தவறுவதில்லை. இது ஏன்...?

அன்றாடம் உணவு இல்லாமலே தமது வாழ்வியலை நகர்த்த முடியாது. சிரமப்படும் மனிதர்கள் இருக்கவே செய்கின்றார்கள் எமது புலத்தில்.

வறுமை என்ற கொடிய நோய் தாக்கும்போது, அது பல குற்றச் செயல்களை செய்யத் தூண்டும். இவற்றில் இருந்து வறியவர்களை பாதுகாக்க நாம் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இன்று புதிய சிந்தனைகள் பிறக்கின்றது. வறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்வதினால், அவர்களை இன்னும் சோம்பேறிகளாகவும், வறுமைப்பட்டவர்களாகவும் உருவாக்குவது, என்று இந்தச்சிந்தனையும் சரி போன்றுதான் தோன்றுகின்றது. வறுமையில் வாடுவோரும் தம்மால் இன்று தொழில் முயற்சிகளை மேற் கொள்வது நல்லது உழைக்கவேண்டும், பணம் சம்பாதிக்கவேண்டும், முன்னேற வேண்டும் என்ற மன உந்தல் ,இருக்கும் போதே அவர்கள் உயர்வுகாண முடியும். வறுமையையும் ஒழிக்க முடியும்.

இதைவிடுத்து தினமும் மற்றவரிடம் கையேந்தி வாழ்வது பொருத்தமற்றது, அவலமானது. இன்று பிச்சை - தர்மம் என்று வருவோரில் அநேகர் ஆரோக்கிய மானவர்கள். எவ்வித ஊனமும் இல்லாதவர்கள் உழைக்க தெம்புற்றவர்கள். இவர்கள் சிந்திக்க வேண்டும். தாம் தொழில் செய்து, உழைத்து, தமது வறுமையை நீக்க பாடுபடவேண்டும் என்று இந்தச்சிந்தனைப் போக்கை தவிர்த்து மற்றவர்களிடம் கையேந்தி நிற்பது ஆரோக்கியமானது அல்ல.

இதற்கு எதிர்மாறாக முதுமையும் - ஊனமும் உள்ளவர்கள் உதவி கேட்டு வருகின்றபோது, அவர்களை நேசித்து உதவி வழங்கவேண்டும்.

இவர்களுக்குச் செய்யும் உதவி ஆரோக்கியமானது. செய்ய வேண்டியது அவசியம். ஏனெனில், இவர்கள் உழைகக தெம்பில்லாதவர்கள். இவர்கள் மற்றவர்களில் தங்கித்தான் வாழ்பவர்கள்.

உழைப்பதற்கு தெம்புள்ள ஆரோக்கியமுள்ளவர்கள் சோம்பறிகளாக பிச்சை எடுத்தலை தொழிலாக கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் குடி-போதைக்கு அடிமைகளாக இருந்து, தாம் அன்றாடம் உழைக்கும் பணத்தை வீணாக செலவு செய்கின்றார்கள்.

இவர்களை இனங்கண்டு, உழைக்க ஊக்குவிக்க வேண்டும் அல்லது வீடுகளில் பிச்சைக்கு வருகின்ற போது, அவர்களுக்கு வேலை கொடுத்து சம்பளம் கொடுப்பதே சிறந்தது. எனவே, அவர்கள் சோம்பல் தனத்தை ஊக்குவிக்கத்தக்கதாக பணம் பொருள் கொடுப்பது சிறந்தல்ல.

எமது அன்றாட வாழ்வில் எத்தனையோ தரத்தினர், பல இடங்களில் பிச்சை எடுக்கின்றார்கள். சிறுவர் - பெரியோர் - முதியோர் - இளைஞர் - ஊனமுற்றோர் இவ்வாறு பல ரகத்தினரை சந்திக்கின்றோம். இவர்களில் உண்மையான வறுமைப்பட்டவர்கள் யார்? சோம்பல் தனத்தினால் பிச்சை எடுப்போர் யார்? என்று இனம் காண்பது கடினமாகவுள்ளது.

எது என்னவாக இருப்பினும வறுமை ஒழிப்புக்கு உழைக்க வேண்டியது எமது கடமை. இதனால் நாம் சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம். அதற்கு முதலீடுகளை கண்டுபிடித்து கொடுக்கலாம். இதுவும் நாம் வறுமையுற்றோருக்கு செய்யும் மகத்தான சேவை ஆகும்.

எம்மிடம் உள்ளவற்றை பகிர்ந்து வாழ்வதும் சிறந்தது. எம்மிடம் அதிகமாக இருப்பதை இல்லாதவர் களுக்கு கொடுக்கவேண்டும். அதிக பணத்தையும், அதிக பொருட்களையும் பயன்படாது சேகரித்து வைபபின் அதனால் விளையத்தக்கது ஒன்றுமில்லை. இதனால் இவற்றை வறுமை ஒழிப்புக்கு பயன்படுத்தின் அது சிறப்புக்குரிய செயலாகும்.

வறுமையுற்றவர்களுக்கு எம்மால் உதவமுடியா விட்டாலும், உதவும் நிறுவனங்களை தெரிந்தால், அதனை வழிகாட்டி உதவுதலும் உதவியே. இதனை விடுத்து வாயளவில் பாவம் - பரிதாபம் சொல்வதில் எவ்வித பயனும் இல்லை.

எனவே, வறுமை என்ற கொடிய நோயை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். உறவுகள் துன்புறுகின்ற போது, நாம் அதற்கு உதவ முடியும் என்றால், அதனை மேற்கொள்ள தயங்கக்கூடாது. இவ்வாறு செய்வதினால் குற்றச்செயல்களை ஓரளவு தடுக்க முடியும். சிந்திப் போம், செயற்படுவோம்.

- யாழ்.ராதவல்லி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் இருபது பேர் பலி

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில், இருபது பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் தொடர்பாக அமெரிக்க இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அல்கொய்டா அமைப்பின் தலைவர்களில் ஒருவரான சர்காவி, பலூஜாவில் மறைந்திருந்த வீட்டின் மீதே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டது.

சர்காவியுடன் தொடர்புடையவர்கள் எங்கே, எப்படி மறைந்திருந்தாலும், நாம் அவர்களைக் கண்டுபிடிப்போம். பின்னர் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - சர்காவியை பிடித்துத் தருபவர்களுக்கு பத்துமில்லியன் அமெரிக்க டொலர்கள் தரப்படுமென அமெரிக்கா அறிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஈராக்கின் ஐந்து நகரங்களிலும் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு சர்காவி இஸ்லாமிய இணையத்தளம் மூல

மாகப் பொறுப்பேற்றுள்ளார்.

ஈராக்கில் தொடர்ந்தும் வன்செயல்கள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. நேற்றுமுன்தினம் பகுமா நகரிலுள்ள பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இதனைவிட, அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்துவதற்கு ஒரு மணிநேரம் முன்பதாக பலூஜா நகரில் வைத்து இரண்டு ஆயுததாரிகள் அமெரிக்கப்படையினரால் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க அதிபர் புஷ் அயர்லாந்து பயணம்

ஈராக்கின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுடன் கலந்துரையாடலை நடத்துவதற்காக, அமெரிக்க அதிபர் புஷ் அயர்லாந்து சென்றுள்ளார்.

அயர்லாந்துக் குடியரசுக்கு அமெரிக்க அதிபர் புஷ்ஷின் உத்தியோகபூர்வ முதலாவது விஜயம் இது வெனக்கூறப்படுகிறது.

ஈராக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் முரண்பாடுகள் தொடர்பாக அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் இருந்த நிலையிலேயே அதிபர் புஷ்ஷின் இந்த விஜயம் நடந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுடனான சந்திப்பில் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்டுவரும் போர் மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக அதிபர் புஷ் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

புஷ்ஷின் இந்த விஜயத்தை முன்னிட்டு அயர்லாந்தில் மிகப் பெரியளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

செய்யப்பட்டுள்ளன. அயர்லாந்து பொலிஸின் கால்ப் பகுதி இந்தப் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதனைவிட, ஆயிரக்கணக்கான பொலிஸார் மற்றும் படையினர் நான்கு கடற்படைக்கப்பல்கள் என்பன ஏற்கனவே பாதுகாப்பு பணியிலுள்ள 700 அமெரிக்கப் படையினருடன் இணைந்துகொள்ளவுள்ளனர்.

அயர்லாந்தின் வரலாற்றிலேயே மிகப் பெரிய இராணுவப் பாதுகாப்பு என்பது, தற்போது மேற்கொள்ளப்படுவதுதான் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பணியாளரின் வாகனம் மீது ஆப்கானில் தாக்குதல்! மூவர் பலி!

தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பஸ்ஸில் பயணம் மேற்கொண்டிருந்த பெண் பணியாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட மூவர் கொல்லப்பட்டதுடன் ஒன்பது பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் ஆப்கானின் கிழக்குப் பகுதியான ஜலலபாத்தில் இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆப்கானில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு அங்கு வாக்காளர்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை இடம்பெற்றுவருகிறது.

இந்த வகையில் ஆப்கானின் கிழக்குப் பகுதியில் வாக்காளர்களைப் பதிவதற்குச் சென்ற பெண் பணியாளர்களின் வாகனம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை, தாக்குதலுக்குள்ளான வாகனம் தேர்தல் திணைக்களத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்ததாகவும், இந்த வாகனத்தில் ஏற்கனவே, வெடித்த குண்டு பொருத்தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கபட்டுள்ளதாகவும், இராணுவப் பல

னாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தக்குண்டு வெடித்த வேளை, வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனத்தின் சாரதி பாய்ந்து தப்பியுள்ளார். அவருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. இராணுவத்தினரால் இவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு ஆப்கான் அரசாங்கம் மற்றும் ஐ.நா.சபை இணைந்து வாக்காளர்களைப் பதியும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதுவரை 4.5 மில்லியன் மக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 1.3 மில்லியன் பேர் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் இடம்பெறும் கிளர்ச்சிகள் அடக்கப்படுமென்கிறார் அலாவி

ஈராக்கில் இடம்பெற்றுவரும் வன்செயல்களை கட்டுப்படுத்தப் போவதாக அந்த நாட்டின் புதிய பிரதமர் அயட் அலாவி சூளுரைத்துள்ளார்.

புதிய பிரதமர் அலாவி மேலும் தெரிவிக்கையில் -

கிளர்ச்சிவாதிகள் தமது நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும் இல்லையெனில் அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள். இந்த மாதம் 30 ஆம் திகதி இடைக்கால அரசின் அதிகாரங்கள் கையளிக்கவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்படுவதென்பது அதனைக் குழப்பும் நோக்கத்தினாலாகும்.

இந்தச் சம்பவங்கள் தனிமைப் படுத்தப்பட்டவர்களால் நடத்தப்படுகிறது இவற்றை நாம் விரைவில் தோற்கடிப்போம். அத்துடன், தற்போது நடைபெறும் தாக்குதல்கள் இனிவரும் நாட்களில் மேலும் அதிகரிக்குமென நினைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பி.பி.எசிக்கு பேட்டியளித்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின்பவல் தெரிவிக்கையில் - ஈராக்கில் இடைக்கால அரசுக்கான அதிகாரங்கள் கையளிப்பதனை தடுக்கவே இந்தத் தாக்குதல் நடைபெறுகிறது.

இந்தக் கிளர்ச்சி நடவடிக்கைகள் எமக்கு மிகப் பெரும் தலைவலியை கொடுத்துள்ளது. ஆனால் இவற்றை நாம் சரியாக கையாள்வோம்.

இடைக்கால அரசுக்கான அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட பின்னர் அங்கு வன்செயல்கள் குறையுமென நான் நம்புகின்றேன்.

சதாம்ஹுசைனும் அவரது பரிவாரங்களும் அகற்றப்பட்ட பின்னர் உலகம் தற்போது பாதுகாப்பாக உள்ளதென்பதை நான் உறுதிகூறுவேன்.

ஈராக்கில் தற்போது இடம்பெறும் கிளர்ச்சிகள் பெரும் சிக்கலான நிலையிலுள்ளது. இந்தச் சிக்கலான நிலையை நாம் சரியான முறையில்

கையாள்வோம். அத்துடன் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து பாதுகாபுகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்தார்.



அமெரிக்க விமானப்படைக்கு முக்கிய தகவல்களை அனுப்ப புதிய செயற்கைக்கோள் அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே அனுப்பப்பட்ட செயற்கைக்கோள் செயலிழந்ததைத் தொடர்ந்து இந்தப் புதிய செயற்கைக்கோள் அனுப்பப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோள் புளோரிடா மாநிலத்தில் உள்ள விமானப்படைத் தளத்தில் இருந்து போயிங் டெல்டா - 2 ரொக்கெட்டில் வைத்தே அனுப்பப்பட்டது. தீப்பிளம்பை கக்கியபடி அந்த ரொக்கெட் புறப்பட்டுச் சென்ற காட்சி.

காஷ்மீரில் நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத்தினர் உட்பட 12 பேர் பலி!

இந்தியாவின் எல்லைக்குட்பட்ட காஷ்மீர் மாநிலத்தில் இஸ்லாமிய ஆயுததாரிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட இந்த தாக்குதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

காஷ்மீர் மாநிலத்தில் இஸ்லாமிய ஆயுததாரிகளின் தாக்குதலை தடுக்கும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம இராணுவப் படை என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இராணுவத்திடம் பயிற்சிபெற்ற இவர்கள் இரவு நேரங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர். இவ்வாறு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டவர்களே இஸ்லாமிய ஆயுததாரிகள் என சந்தேகிக்கப்படுவோரால் தாக்குதலுக்குள்ளானவர்கள்.

இந்தத் தாக்குதலில் 10 கிராம இராணுவப் படைவீரர்கள் ஒரு பெண் மற்றும் குழந்தை உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர். காயமடைந்த 15 பேரில் நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை.

இதேவேளை,

இந்திய - பாகிஸ்தான் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் குறித்து இன்று டெல்கியில் பேச்சுக்களை நடத்தவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

பண்ணை முறையில் இறால் வளர்ப்பது நாசகாரமானது. இராசயனங்கள், உரங்களின் மூலம் நீரை மாசடையச் செய்வதுடன் உலகின் கால்வாசிப் பங்கு கண்டற் காடுகளின் அழிவுக்கும் காரணமாக அமைகின்றது.

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழ் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழ் விருதலைப்புலிகள்
தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

அரசாங்க அச்சகத்தில் தீ விபத்து; பெருமளவான பொருட்கள் அழிவு!

(கொழும்பு)

கொழும்பு - பொரளையில் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் நேற்று மாலை ஆறு மணியளவில் ஏற்பட்டத விபத்தினால் பெருமளவான சேதங்கள் ஏற்பட்டன.

நேற்று மாலை 6 மணியளவில் அரசாங்க அச்சகத்தின் பொறியியலாளர் பகுதியில் ஏற்பட்ட பாரிய தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தீயணைப்புப் படையினர் பல மணிநேரம் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது.

எனினும், அருகில் இருந்த கடதாசி களஞ்சியப் பகுதிக்குத் தீ பரவுவதற்கு முன்னரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதனால் பாரிய சேதங்கள் ஏற்படாது தவிர்க்கப்பட்டது.

இந்தத் தீ விபத்தினால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அச்சிடும் பணிகள் எதுவும் பாதிக்கப்பட்டாது என்று அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

தேர்தலுக்காக அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் ஏற்கனவே தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாகவும், இந்த விபத்தில் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடும் பணி இன்று நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(01)

ஹலோட்ரஸ்ட் நிறுவன

வாகன எரிப்புச் சம்பவம்; சந்தேகத்தில் ஐவர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் பிரிட்டிஷ் நிறுவனமான ஹலோட்ரஸ்ட்டின் வாகனத் தரிப்பிடத்திற்குள் புகுந்து வாகனங்களை எரித்த சம்பவம் தொடர்பாக, ஐந்து பேரைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, அமைக்கப்பட்ட விசேட பொலிஸ் குழுவின் விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை விசாரித்த பின்னர், பிணையில் விடுதலை செய்யவுள்ளதாகவும், இவர்கள் முன்பு இந்த நிறுவனத்தில் பணியாற்றியவர்கள் எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாகன எரிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் தீவிரமாக பொலிஸ் விசேட குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசாரணைகள் முடியும் வரை ஹலோட்ரஸ்ட்டின் நிறுவன வாகனத் தரிப்பிடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியத் தலையீட்டைக் கோரும் முயற்சிகள் கொழும்பில் தீவிரம்!

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவைத் தலையிடச் செய்யும் முயற்சிகள், தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக அறியவருகின்றது.

கொழும்பிலிருந்து இயங்கிவரும் தமிழ்க்கட்சி ஒன்று இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இதனடிப்படையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அவர்களுக்கு தன்னாட்சியை வழங்குவதென்றும், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பகுதிகளில் மாற்று தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கிய விதத்தில் தற்போது நடைமுறையில் உள்ள மாகாணசபைக்கு மேலதிக அதிகாரங்களைக் கொடுத்து அதனை இயங்கவைப்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த யோசனை ஏற்கனவே இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டு, அதன் அங்கீகாரமும் கிடைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கொழும்பு நகரப் பாதுகாப்புக்கு எந்தவித பாதிப்பும் இல்லை

பாதுகாப்பு அமைச்சின் செயலர்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை என்றும், மாநகரப் பகுதியில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உரிய முறையில் செய்யப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மேலதிக பாதுகாப்பிற்கான அவசியம் இல்லை. அவசர நேரங்களில் பொலிஸாருக்கு எந்த நேரமும் உதவப் படையினர் தயார் நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

படைத்தரப்பைப் பொறுத்தவரையில் தற்சமயம் நகரில் மேலதிகமாகக் காணப்படும் சோதனைத் தடைகளை அகற்றும் நோக்கம் இருக்கிறது. இதனால், நகரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என நம்பவில்லை.

அண்மையில் கிரான்ட்பாஸ் பகுதியில் தற்கொலை அங்கி கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து, கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தப் பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும், அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர - கொழும்பில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை அங்கிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(01)

அடுத்த இராணுவத் தளபதியாக...

சாந்த கொட்டேகொட நியமிக்கப்படவுள்ளார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இராணுவத்தளங்களுக்கு விஜயம் செய்து பிரியாவிடை பெற்று வருகிறார்.

ஆயினும், மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஐ.தே.க. சார்பானவர் என்றும் ஜே.வி.பி மற்றும் ஆளும் கட்சி வட்டாரத்தில் இவரை இராணுவத் தளபதியாக நியமிக்க எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனால், லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு ஆறு மாத கால சேவை நீடிப்பு வழங்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆயினும், தற்போது மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை இராணுவத் தளபதியாக நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா அங்கீகாரம் அளித்திருக்கிறார்.

தற்போது - இராணுவத் தலைமை அதிகாரிகயாகவும், கிழக்கு மாகாண கூட்டு நடவடிக்கை கட்டளைத் தளபதியாகவும் பதவி வகிக்கும் இவர், எதிர்வரும் 1 ஆம் திகதி இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்பார்.(01)

நிர்வாகத்தின் பழிவாங்கலால்

பாதிக்கப்பட்ட மருத்துவபீட மாணவி செவ்வாய் முதல் உண்ணாவிரதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மத்துவபீட மாணவி ஒருவர் மருத்துவபீட நிர்வாகத்தின் பழிவாங்கல்களினால் தனது கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தும், தமது கோரிக்கைக்கு நியாயமான தீர்வு வழங்கக் கோரியும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக செய்தி ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

மருத்துவபீட மாணவியான கிருஷ்ணன் புஷ்பமாலா என்பவரே உண்ணாவிரதத்தினை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினர் - பொறுப்பற்ற மற்றும் பழிவாங்கும் நோக்குடன் செயற்பட்டமையால் 2001 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரை பல்கலை மாணவி என்ற தகுதியைத் தான் இழந்திருந்ததாகவும், ஆனால் அக்காலப் பகுதியில் பல்கலை மாணவிக்கு தகுதியிலேயே தான் இருந்ததாக மனிதஉரிமை ஆணைக்குழுவின் விசாரணையின் முடிவில் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் இதற்கான நியாயமான தீர்வை வழங்கக் கோரி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்க கடற்படை....

இலங்கையின் இறைமையை பேணவும், கடலாதிக்கத்தை நிலைநாட்டவும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை துணைபுரியும் என்று குறிப்பிட்ட கடற்படை தளபதி, இலங்கையின் கடல் எல்லையில் நிகழும் சட்டவிரோத ஆயுதக்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அளவிற்கு இந்தக் கப்பல் பெரிதும் உதவும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்காவின் கரேஜஸ் என்ற கண்காணிப்பு கப்பல உத்தியோகபூர்வமாக இலங்கையிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வு வொஷிங்டன் நகரில் இடம்பெற்றது. அமெரிக்கக் கடற்படைத் தளபதி தோமஸ் கொலின்ஸ் இந்தக் கப்பலை கடற்படைத் தளபதி தயா சந்தகிரியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இலங்கைக் கடற்படையின் இந்தக் கப்பலுக்கு ஏ-621 என்று குறியிட்ட இலக்கம் பொறிக்கப்பட்டுள்ளது.

கரேஜஸ் கப்பலை கையேற்க அமெரிக்கா சென்றிருந்த கடற்படை தளபதி ஒருவாரகால விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பினார்.

பேரினவாதிகளை போரில் சந்திக்க....

அழிவுப் பாதையில் கொண்டுசெல்லும் ஒரு நிலை தோன்றும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது மக்கள் கொடுமைப்படுத்தப்படுவதையும், நித்தமும் அடிமைப்பட்டு சிதையுண்டு இருப்பதையும் பத்திரிகைச் செய்திகள் சித்திரித்துக் காட்டுகின்றன.

இவற்றுக்கெதிராக எமது துரித செயற்பாடுகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளை இல்லாதொழிக்கும் வகையில் எமது தலைமை விழிப்பாகச் செயற்படுகின்றது.

இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழலை சாதகமாகப் பயன்படுத்தி தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் எமது தேசத்தைக் காக்கின்ற செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்.

இந்தக் காலம் சமாதானத்திற்கான காலம். பேச்சுவார்த்தை என்ற போர்வையில் சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு புகட்டப்பட்ட பாடமே இந்தப் பேச்சுவாத்தையாக காணப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தை மூலம் மக்களுக்கு தீர்க்கமான முடிவொன்று கிடைக்குமானால், அதைப்பற்றிச் சிந்திக்கும் காலமாக சமாதான காலத்தை தேசியத் தலைவர் பயன்படுத்தி வருகின்றார்.

எனவே எமது மக்களை ஒற்றுமைப்படுத்தி செயற்படுகின்ற காலமாக இந்தச் சமாதான காலம் அமையவேண்டும்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில், அது அர்த்தமற்றதாகவே காணப்படுகின்றபோதும் - இன்றைய சந்திரிகா அரசானது எமக்கு ஓர் விடிவைப் பெற்றுத்தரும் என நாம் எண்ணிக்கொள்ளும் இக்கட்டான நிலைக்கு எம்மைத் தள்ளியுள்ளது.

எமது மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் திட்டமிட்ட செயற்பாடாகவே கிழக்கின் செயற்பாடுகள் காணப்படுகின்றது.

சிங்கள அரசின் திட்டமிட்ட செயற்பாட்டால்தான் கிழக்கில் கருணா என்ற துரோகி, தாயகத்தின் ஒரு பகுதியை சூறையாடிச் செல்ல முற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றன என்பதை அனைவரும் அறிவார்கள்.

சிங்கள தேசத்துடன் தொடர்புகள் வைத்த துரோகி கருணா, தமிழ் மக்கள் சார்பில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

ஆனால், கிழக்கைச் சிதைக்க எதிரி மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தலைவரின் வழிநடத்தலில் முறியடிக்கப்பட்டன.

எனவே, இந்த பேரினவாத சக்திகள் - சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் எந்தத் தீர்வையும் எமது இனத்திற்கு பெற்றுத்தர முடியாது. எமது தாயக மண்ணை நாமே காப்பாற்ற வேண்டும்.

சுதந்திரம் ஒன்று வேண்டுமானால, நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு வரலாற்று சக்தி என்பதை வெளிக்கொணரவேண்டும்.

தேசியக் கொள்கையுடன், கடமையுடன் ஒன்றிணைந்து புலிகள்தான் மக்கள், மக்கள்தான் புலிகள் என்ற உறுதியான நிலைப்பாட்டை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆளும் அரசானது, பேச்சுவார்த்தைகளை நகர்த்திச் செல்லும் சக்திகளை பின்புறமாக வைத்து பேச்சுவார்த்தைகளை குழப்புகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. சர்வதேசத்துடன் இணைந்து உதவிகளைப் பெற்று மீண்டும் தம்மை வலுப்படுத்திக் கொள்கின்றது.

இன்று அரச படைகள் சர்வதேச உதவிகளைக் கொண்டு கடலிலும் தரையிலும் புதிய அணிகளைத் தோற்றுவிக்கின்றன. கருணாவின் பாதுகாப்பை அரசு பொறுப்பெடுத்துக்கொண்டதை நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்தியிருக்கின்றோம். பேச்சுவார்த்தைகளை குழப்புவதற்கு பேரினவாதசக்திகள் போட்ட திட்டங்களை எமது தலைவர் காலத்திற்குக் காலம் பொறுமையுடன் எதிர்கொண்டு வந்துள்ளார். எமது தலைவர் சமாதான காலத்தில் மிகவும் அவதானமாகவும் சிறப்பாகவும் காய்நகர்த்தி வருவதை அனைவரும் அறிவீர்கள். நாம் அனைவரும் ஒருமித்து நிற்கவேண்டும்.

பேரினவாத சக்திக்கு எதிராக போரைச் சந்திக்க எமது தலைவர் தயாராக இருக்கின்றார். எமது தலைவரின் காலத்தில் தமிழருக்கு விடிவு திடைக்கும் என்று அரசியற்துறை பொறுப்பாளர் தங்கன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

திருமதி செல்வநாயகம் பொன்னம்மா

(வருணன் அச்சுவேலி)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வருணன் அச்சுவேலியை வசிப்பிடமாகவும், புலோலியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சரவணமுத்து வள்ளிப்பிள்ளை ஆகியோரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற நாகமணி, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற நாகமணி செல்வநாயகத்தின் அன்பு மனைவியுமான பொன்னம்மா நேற்று இறைபதமடைந்தார்.

அன்னார் சறோஜினிதேவி (ஓமான்), ஸ்ரீபவான் (கனடா), சாரதாதேவி (கனடா), ஜெயதேவி, சாந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகராஜா (ஓமான்), வனிதா (கனடா), வரதராஜா (கனடா), கமலநாதன் (சுவிஸ்-முன்னாள் தலைவர், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்), திருச்செல்வம் (பிரதம நூலகர், பருத்தித்துறை பிரதேசசபை, பத்திரிகையாளர்), ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற லண்டன் சற்குணராஜா, சதாயினிமலர் (கனடா), துஷ்யந்தி (கனடா), பிரசன்னா (கனடா), பவானந்தன் (கனடா), சுதர்சினி (ஜேர்மனி), விநோதினி (கனடா), சுகன்ஜா (கனடா), கிஷோக்குமார் (லண்டன்), தர்சன் (கனடா), சுமங்களா, அருணா (பருத்தித்துறை மெ.பெ. உ.பாடசாலை), சிவதேவன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), அபிரா (பருத்தித்துறை மெ.பெ. உ.பாடசாலை), கிருஷா (பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை), துவாரகன் (தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும், கர்சினி (கனடா), கிஸ்சன் (கனடா), கோபிகா (ஜேர்மனி), விஸ்ணுவரதன் (ஜேர்மனி), விதுசியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

நிருபர்வளவு,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
ஏ.என்.எஸ்.திருச்செல்வம்
மருமகன்

T.P : 0212263603, 0777143022

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.